Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் [illegible] சேவைகளுக்கும்
இல. 13, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8816, 0777 801038 (சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 14 (03.07.2004) சனிக்கிழமை இதழ் :274

# பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு; அரசாங்கத்தின் காலக்கெடு முடிந்தது!

## போராட்டம் நடத்தப்போவதாக பல்கலை மாணவர் எச்சரிக்கை!

(கொழும்பு)

தாம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்குள் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலின்போது வாக்குறுதி அளித்திருந்த போதும் -

நேற்றுடன் இந்தக் காலக்கெடு முடிவுற்றது. இந்த வாக்குறுதியை அரசாங்கம் குறித்த காலத்துக்குள் நிறைவேற்றத் தவறியதால், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் அரசுக்கு எதிராக மாபெரும் மறியற்போராட்டத்தை நடத்தப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் காலத்தில் - வேலையற்ற பட்டதாரிகளுக்கு மூன்று மாத காலத்துக்குள் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்திருந்தது.

புதிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்து நேற்றுடன் மூன்று மாதங்கள் முடிவுற்றபோதும் - இதுவரை வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை.

நாடு முழுவதும் சுமார் 30 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர். 18 வயதுக்கும் 38 வய

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகம் குறித்து பேசுவதற்கு ஜனாதிபதி இன்னமும் முடிவு செய்யவில்லை!

## அடியோடு நிராகரிக்கிறார் ரில்வின்!

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் – அரசாங்கம் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த முற்பட்டால் ஜே.வி.பி அதில் குறுக்கிட்டுத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கும் என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரி வித்தார்.**

**இது தொடர்பாக – கொழும்பிலுள்ள ஆங்கிலப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ரில்வின் சில்வா மேலும் தெரிவிக்கையில் –**

பிரச்சினைக்கான இறுதித்தீர்வு குறித்து பேசுவதற்கு முன்னர், இடைக்கால நிர்வாகம் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு எந்த உரிமையும் கிடையாது.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இதுவரை எந்தவித உத்தியோகபூர்வ முடிவையும் எடுக்கவில்லை.

விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை குறித்துப் பேசிய பின்னரே இறுதித்தீர்வு குறித்துப் பேசவிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் குறித்து

# இந்தியத் தலைவர்களுக்கு விளக்க எரிக் சொல்ஹெய்ம் இந்தியா பயணம்

(புதுடெல்கி)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக - நான்கு நாள் விஜயத்தினை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த நோர்வே விசேட சமாதானத்துதுவரான எரிக்சொல் ஹெய்ம் -

தமது முயற்சி கைகூடாத நிலையில் அது குறித்து விளக்கமளிப்பதற்காக இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவினரிடையே மோதல்:

# அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் காயமுற்றவருக்கு சிகிச்சை அளிப்பு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுடன் இணைந்து செயற்பட்டவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் படுகாயமுற்ற இளைஞர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்தத் தகவலை கொழும்பு பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

கொழும்பில் தங்கியுள்ள கருணாவின் குழுவைச் சேர்ந்தவர்களிடையே இடம்பெற்ற மோதலிலேயே இந்த இளைஞர் காயமுற்றதாகக் கூறப்படுகிறது.

கருணா குழுவிலிருந்து தான் விலகிச் செலலப்போவதாகக் கூறியதை அடுத்தே இவர் மீது துப்பாக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் வேறுபாடுகளை மறந்து

# தமிழ் – முஸ்லிம் இனத்தவர்கள் ஒன்றுபட்டு செயற்படவேண்டும்!

## ரவூப் ஹக்கீம் கூறுகிறார்



(கொழும்பு)

அரசியல் வேறுபாடுகளை ஓரங்கட்டிவிட்டு, தமிழ் - முஸ்லிம் சிறுபான்மை இனத்தவர்கள் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இரண்டு சமூகங்களும் இதனை உணர்ந்து செயற்படாவிட்டால், எதிர்காலத்தில் பாரிய பல விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மாத்தளையில் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக நாட்டில் அநீதிகளும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கன்ரர் விபத்தில் சிறுமி உயிரிழப்பு!

## பொதுமக்களால் வாகனம் தீக்கிரை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கன்ரர் ரக வாகனம் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்த நிலையல் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 8.30 மணிக்கு நல்லிக்குஞ்சுக்குளம் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தின்போது இதேயிடத்தைச்சேர்ந்த ரூபிகா (வயது 11) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது சகோதரரான குணரட்னம் குகதீபன் (வயது 09), குணரட்னம் பவா (வயது 07) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரலின் சிறப்பு ஒலிபரப்பு!

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 5 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள கரும்புலிகள் நாளை முன்னிட்டு இன்று முதல் மூன்று நாட்களுக்கு சிறப்பு ஒலிபரப்பை நடத்துவதற்கு புலிகளின் குரல் வானொலி ஏற்பாடு செய்துள்ளது.

காலை 6.30 மணிமுதல் இரவு 10 மணிவரை இந்த சிறப்பு ஒலிபரப்பு தினமும் இடம்பெறுமென அறி

(12 ஆம் பக்கம் பார்க்க)



போரின் பாதிப்புக்கள் குறித்து கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்ட புகைப்படக் கண்காட்சியை கூர்ந்து அவதானிக்கும் எரிக்சொல்ஹெய்ம்.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# நகைச்சுவைக் கதம்பம் நூல்வெளியீட்டு விழா

'நகைச்சுவைக் கதம்பம்' நூல் வெளியீட்டுவிழா நாளை யாழ்.ஸ்கந் தவரோதயாக் கல்லூரி உப.அதிபர் ஆறுதிருமுருகன் தலைமையில் பி.ப 3.00 மணிக்கு இராமநாதன் கல்லூ ரியில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில், வரவேற்புரையை இராமநாதன் கல்லூரி அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரமும், ஆசியுரையினை கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியும், வாழ்த்துரையினை வலயக் கல்விப் பணிப்பாளர் றெ.இருதயநா தன், உடுவில் கோட்டப் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகி யோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையினை தெல் லிப்பளை பிரதேச செயலர் கலாநிதி க.குணராசாவும், மதிப்பீட்டுரையினை இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இ.துரைஎங்கரசுவும் நிகழ்த்தவுள்ள னர். முதற் பிரதியை உடுவில மகளிர் கல்லூரி அதிபர் கலாநிதி சி.செல் லையா, செ. இலகுநாதன் ஆகியோ ரும் பெறவுள்ளனர்.

## சலன சித்திர அங்கத்தவருக்கான கலந்துரையாடல்

'சலன சித்திரம் - யாழ்ப்பாணம்' அங்கத்தவர்களுக்கும் 'சலன சித்தி ரம்' சம்மேளனத்திற்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நெல்லியடி 'கிறிஸ்ரல்' கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அமைப்பின் புதிய நடைமுறைகள் தொடர்பாக தேசிய திரைப்படக் கூட் டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் க.தேவதாசன் அங்கத்த வர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

## சாவகச்சேரியில் வீதிகளுக்கு மின்விளக்குகள்

சாவகச்சேரி நகரசபைக்கு உட் பட்ட பிரதான வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி நகரசபையினர் மேற் கொண்டு வருகின்றனர். (24)

## கும்பாபிஷேகம்

சரசாலை தெற்கு மகிழ்நிள்ள வளவு இராமாவில் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேக விழா எதிர்வரும் எட்டாம் திகதி காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

## 23 ஆவது பொதுக்கூட்டம்

சங்கானை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தின் 23 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை சங்கானை போத்தல் கள்ளு அடைக்கும் நிலையத்தில் சங் கத் தலைவர் க.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.(100)

# சிவபூமி பாடசாலை திறப்புவிழா நேற்று

சிறுவர் மனவிருத்தி சிவபூமி பாடசாலைத் திறப்புவிழா நேற்றுக் கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் வீதியில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறுதிருமுருகன் தலை மையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில், பிரதம விருந்தி னர் கலாநிதி செல்வி.தங்கம்மா அப் பாக்குட்டி விளக்கேற்றிப் பாடசா லையினைத் திறந்து வைத்தார்.


இங்கு சிறப்புரைகளை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு. மோகனதாஸ், யாழ்.மாவட்ட நீதிபதி த.விக்னராஜா யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி தயாசோமசுந்தரம் ஆகியோர் வழங்கினர். கௌரவ விருந்தினராக ம.ஜெயசீலன் இந்நிகழ் வில் கலந்து கொண்டார்.

இந்தநிகழ்வில் சிவபூமி பாட சாலையில் கல்விகற்கும் மாணவர் கள், பெற்றோர்கள், அறிஞர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.


# ஆயுள்வேத வைத்தியசாலைக்கு புதிய வைத்தியர் நியமனம்

யாழ்.மாநகரசபையின் ஆயுள் வேத வைத்தியசாலையில் பணி யாற்றிய வைத்தியர் சிறீ கமலா தேவி துரைராஜா கடந்தவாரம் முதல் மானிப்பாய் பிரதேசசபை யின் கீழ் இயங்கும் ஆனைக்கோட்டை உப-அலுவலக வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இந்த வைத்தியசாலையில் கட மையாற்றிய வைத்தியர் தவ மலர் விஜயரட்ணம் கடந்த மாதத் துடன் ஓய்வுபெற்றுள்ளதையடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (100)



மானிப்பாய் பிரதேசசபை - ஆனைக்கோட்டை உப-அலுவலக ஆயுள் வேத வைத்தியசாலையில் நீண்ட காலமாகக் கடமையாற்றிக் கடந்த மாதத்துடன் ஓய்வுபெற்றுப் பிரியாவிடை பெற்றுச் செல்லும் வைத்தியர் தவமலர் விஜயரட்ணத்துடன் ஏனைய உத்தியோகத்தர்களையும் காண லாம். (100)



அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற பொன். கணபதிப்பிள்ளை, கி.அருமைத்துரை ஆகியோர் அல்வாய் வடக்கு மகாத்மா சனசமூக நிலையத்தினால் கௌரவிக்கப்பட்ட நிகழ்வில் எடுக்கப்பட்ட படம்.

## சமகால அரசியல் தொடர் கருத்தரங்குகள்

சமகால அரசியற் கருத்தரங்கின் 12 ஆவது தொடர் நாளை மாலை 4.00 மணிக்கு திருநெல்வேலி முத் துத்தம்பி வித்தியாலய மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

யுத்த நிறுத்தத்தின் பின்னான தமிழ் மக்களின் சமூக, பொருளாதார மாற்றங்கள் என்ற தலைப்பில் என் வரதராஜன் கருத்துரைவழங்குவார்.

13 ஆவது சமகால அரசியற் கருத்தரங்கு அன்றைய தினம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண் டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தாயக விடுதலைப் போராட்ட பண்பாட்டு செயற்பாட்டின் பங்கு என்ற பொருளில் பல்கலைக்கழக நுண் கலைப்பீடத்தலைவர் கலாநிதி க. சிதம்பரநாதன் நிகழ்த்துவார்.

அன்றையதினம் மாலை 3.30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் 14ஆவது தொடர் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக்கருத்தரங்குகள் தொல் லியல் நோக்கில் ஈழத்தின் தமிழ் அரச உருவாக்கம் என்ற தலைப் பில் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையை சேர்ந்த கலாநிதி ப.புஸ்ப ரட்ணம் நிகழ்த்துவார்.


கே.சி.சி.சி.விளையாட்டுக்கழகம்

கமலநாதன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண சுற்றுப்போட்டி



அமரர்

ஆறுமுகம் கமலநாதன்

(முன்னாள் வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர்)

ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் அனுசரணையுடன் எம்மால் நடத்தப்படும் 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி.

பிரதம விருந்தினர்

திரு. T.கிருபாகரமூர்த்தி

(அமைப்பாளர் கே.சி.சி.சி.கிளை. சுவிஸ்)

இடம் : கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானம்

காலம் : 03.07.2004 காலை 8.30 மணி தொடக்கம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(774) சுற்றுப்போட்டிக்குழு.

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல்

சூரியா, ஜோதிகா, விவேக் மற்றும் பலர் நடித்த

பேரழகன்



காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30 (பு.நே)

(சி-2623)

நிறஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், தேவயானி நடித்த

மகாபிரபு

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)

வெள்ளி,சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)

EHTREMITIEH (சி-2621)

நாகம்ஸ் சுன்னாகம்

மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன

அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க

ரஜினி, சௌந்தர்யா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

படையப்பா

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)


# கரும்புலிகள் நாள் போட்டி முடிவுகள்

**கரும்புலிகள் நாளை முன்னிட்டு சர்வதேச மாணவர் பேரவையால் நடாத்தப்பட்ட கவிதை, சிறுகதைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக் கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் முற்பகல் 11 மணிக்கு பேரவையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.**

**இந்தநிகழ்வில் - யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்குவார்.**

**இந்தப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள் 222-3768, 222-3942 ஆகிய தொலைபேசி இலக்கத்தில் அல்லது நேரில் வந்து தம்மை உறுதிப்படுத்து மாறு சர்வதேச மாணவர் பேரவை அறிவித்துள்ளது.**

**வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு :**

## கவிதைத் தலைப்பு

**விடுதலை மூச்சின் வெகுமதி –**

முதலாம் இடம் - செல்வி.செல்வநாதன் செல்வரஞ்சினி (யாழ்.மெதடிஸ் பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை- உயர்தரம் -2005)

**யூலைப் பூக்களில் இது ஒரு வகைப் பூக்கள்**

இரண்டாம் இடம் - செல்வி.கந்தசாமி ஜீவிதா (சந்திரபுர ஸ்கந்தவ ரோதய மகா வித்தியாலயம்-தரம் - 12).

**கரும்புலிகள் –**

மூன்றாம் இடம் -செல்வி கி.டிலோஜனா (யாழ்.நெடுந்தீவு மகா வித்தி யாலயம் - தரம் - 12 - கலைப்பிரிவு)

**பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்**

**தேச விடுதலை உணர்வு –**

செல்வி.சாமிநாதன் மேரிமடோனா (யாழ்.நெடுந்தீவு றோமன் கத்தோ லிக்க மகளிர் கல்லூரி)

**கரும்புலிகள் –**

தி.கமலேஸ்வரன் (முள்ளியவாய்க்கால் மேற்கு, கனிஷ்ட உயர் தர வித்தியாலயம், முல்லைத்தீவு)

**விடிவெள்ளிகளே –**

செல்வி.பவித்திரா சுப்பிரமணிய ஐயர் - (உயர்தரம் - 2005, கலைப் பிரிவு - யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி, கல்வியங்காடு).

**ஒலிக்கட்டும் தமிழ்க்கீதம் –**

நடராஜா கண்ணதாஸ் - தரம் - 11, யாழ்.வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்).

**விடுதலையின் விழுதுகள் –**

செல்வி.தி.தர்மினி - (கிளி.வட்டக்கச்சி மகா வித்தியாலயம்)

**தலைநிமிர்ந்த தமிழினமே -**

செல்வி.ம.வானதி (யாழ்.சிறீ சோமஸ்கந்தா கல்லூரி)

**கரும்புலி வீரன் –**

செல்வி.பிறின்சியா ஜெயச்சந்திரமூர்த்தி (கிளி.கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**விடுதலையான கரும்புலி –**

செல்வி.ம.கரோலினி - (தரம் - 12, கலைப்பிரிவு நெடுந்தீவு மகாவித் தியாலயம்)

**சங்கமமாகும் கரும்புலிகள் –**

ஜோசப்பின் சியார்னி லூக்காஸ் (புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்)

**உலகம் வியக்கும் எம் உயிராயுதங்கள் –**

சிவநேசன் திருக்குமார் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

**சிறப்புப் பரிசு**

**'தயாராகுவோம்' –**

க.றொபேர்ட், இல.4825 கு4, களுத்துறை சிறைச்சாலை, களுத்துறை.

## சிறுகதைத் தலைப்பு

**காத்திருப்பு –**

முதலாம் இடம் - நீதிவேந்தன், அறிவமுது பொத்தகசாலை, முள்ளி யவளை.

**நிழல் ஓவியங்கள் –**

இரண்டாம் இடம் - கா.சுயந்தன், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கிளிநொச்சி.

**சீதன வீடு –**

மூன்றாம் இடம் - சி.செம்பருதி - சுதந்திரபுரம், உடையார்கட்டு, முல்லைத்தீவு.

**பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்**

**என் உயிர்த் தோழனே –**

ஜெ.எம். ஜெனிற்றா, நல்லாயன் வீதி, இளவாலை.

**விண்வெளிப்போர் –**

வி.தேவபாணு, உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு.

**விடுதலை வேட்கை –**

திருமதி.மு.மாலாதேவி, அளவெட்டி மத்தி, அளவெட்டி.

**ஒரு போராளியின் கதை –**

த.பிரபாலினி - மட்டுவில் கிழக்கு, மட்டுவில்.

**சங்கமம் –**

ஏழுமலை மூவேந்தன், நிமலன் புகைப்படக் கலையகம், மல்லாவி.

**ஏன் வந்தான் –**

கி.சோ.பதந்தன் , 37/3, மானிப்பாய் வீதி, தாவடி.

**பழைய முகமூடியுடன் புதிய முகங்கள் –**

நடராசா வினோதரன், ஒட்டுவெளி மிருசுவில்.

**வெற்றித் திலகம் –**

செல்வி.தர்மினி பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

**திணிப்பு -**

தேவி பரமலிங்கம், நாவலடி ஒழுங்கை, வண்.பண்ணை வடமேற்கு.

**தவநெறி –**

சிவகுமார் சிவரூபன் - தரம் - 13, யாழ்.சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயம்.

# ஜப்பான் தூதரகக் குழுவினர் குடாநாட்டுக்கு வரவுள்ளனர்

(கொழும்பு)

இலங்கைக்கான ஜப்பான் தூதரக அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ்குடாநாட்டுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

ஜப்பான் தூதரக செயலாளர் கோயியு வசித்தா, உதவிச்செயலாளர் மாசாயு கியுசுடா, ஆலோசகர் யசோடேக ஆகியோர் தலைமையிலான குழுவினரே வருகை தரவுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து, காலை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். பின்னர், தாம் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு உதவும் நோக்கில் கடற்தொழி லாளர் சங்கப் பிரதிநிதிகள், அதிகாரிகள், கமநல சேவை திணைக்கள அதிகாரிகளுடனும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இவற்றைவிட, திருநெல்வேலி விவசாய நிலையங்களுக்குச் சென்று பார்வையிடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டுக்கான இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இவர்கள் குடாநாட்டுக்கு வருகை தருவது குறிப்பிடத்தக்கது.

# வட - கிழக்கில் சமாதானப் பணிகளின்மூலம் புனரமைப்பை முன்கொண்டு செல்லலாம்!

## நிதியமைச்சர் சரத் அமுனுகம

வடக்கு - கிழக்கில் சமாதான வாழ்க்கையின்மூலம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை முன்கொண்டு செல்லலாம் என, அரசாங்கம் நம்பிக்கைகொண்டுள்ளதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையை வெளியிட்டுவைத்து, ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் புனர் நிர்மாணம் என்ற திட்டத்தின்கீழ் அவசர அபிவிருத்திகளை வடக்கு - கிழக்கில் மேற்கொள்கின்றது.

தற்சமயம் அதனை வடக்கு - கிழக்கு மாகாண சபை அரசாங்கச் செயலகங்கள் மற்றும் ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் வரும் வடக்கு- கிழக்குப் புனரமைப்பு அமைச்சு என் பவற்றின் ஊடாக அரசாங்கம் மேற் கொண்டுவருகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் - வலுவான பொருளாதாரத்துக்கான கூட்டு முன்னணியின் பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில், தமது பொருளாதாரக் கொள்கையை மக்கள் முன்நிலையில் முன்வைத்துள்ளது.

விவசாயத்துறையை ஊக்குவிப்பதன்மூலம், நாட்டின் அபிவிருத்தியை முன் நகர்த்திச் செல்லவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நிவாரணங்களுக்காக அரசாங்கம் - 8 பில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. தேசிய அபிவிருத்தியை கருத்திற்கொண்டு, பொது நிறுவனங்களின் முகாமையின் திறனை அதிகரித்தல்.

விவசாயம், கால்நடை, மீன்பிடி, ஏற்றுமதி, ஆடைக்கைத்தொழில், உல்லாசப் பயணத்துறை, பொது மக்கள் போக்குவரத்து, வீடமைப்பு நிர்மாணப் பணிகள், கல்வி, சுகாதாரம் என்பவற்றை மேம்படுத்தி வருகிறது. அதன்மூலம் வாழ்க்கைச் செலவைக் கட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பதாக அமைச்சர் சரத் அமுனுகம மேலும் கூறினார்.

இதேவேளை - அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையானது, சர்வதேச நாணயநிதியம் உட்பட்ட சர்வதேச நிதி நிறுவனங்களின் ஆலோசனையைப் பெற்றே, தயாரிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அரச சுகாதார சேவைகளால் மக்கள் திருப்தியடைவதில்லை

## மட்டக்களப்பு வைத்தியசாலைப் பணிப்பாளர் தேவராஜன்

சுகாதார சேவைகளைப் பொறுத்தவரையில் மக்கள் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை. சுகாதாரத்துறை சேவையாளர்களுக்கும், மககளுக்கும் நடுவில் ஒரு இடைவெளி இருக்கின்றது.

இந்த இடைவெளி தன்னல மற்ற சேவையை வழங்குவதன்மூலம் நிரப்பப்படக்கூடியது. தாதியர்கள் நினைத்தால் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் வைத்தியர்கள் இல்லாத அவசர சந்தர்ப்பங்களில் கூட சிறப்பாக சேவையாற்ற முடியும.

இவ்வாறு - மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டொக்டர் எம்.தேவராஜன் தெரிவித்தார். தாதியர் பயிற்சியை முடித்து வெளியேறும் 2002 ஆம் ஆண்டு ஏ. பிரிவு மாணவர்களுக்கான சத்தியப்பிரமாண வைபவம் நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்துக்குப் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 20 மாதகாலப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறிய 130 மாணவர்களில் 120 பேர் பெண்கள். 10 பேர் ஆண்கள். இம்முறை இவர்களது பெற்றோரும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டது ஒரு சிறப்பம்சமாகும்.

தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் உட்பட போதனாசிரியர்கள், பிரதம தாதி உத்தியோகத்தர் மற்றும வைத்தியர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்.

# கோண்டாவிலில் விழிப்புக்குழு

கோண்டாவில் பகுதியில் அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்களை அடுத்து விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக குடாநாட்டில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளமையைத் தொடர்ந்து இந்தப்பகுதிக் கிராம அலுவலர்களின் ஏற்பாட்டில் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இரவு நேரத்தில் இப்பகுதி வீதிகளில் கடமையிலீடுபடும் விழிப்புக் குழுவினர் நள்ளிரவு வேளையில் வீதியால் பயணம் செய்வோரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டதன் பின்னர் திருட்டுச் சம்பவங்கள் குறைந்துள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# சபாநாயகருக்கு எதிராக விரைவில் நடவழக்கை!



(கொழும்பு)

## அநுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவுக்கு எதிராக விரைவில் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக சுற்றுலா விமானப் போக்குவரத்து முதலீட்டு அபிவிருத்தியமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

இலங்கை முதலீட்டுச் சபையில் இடம்பெற்ற விசேட வைபவமொன்றில், கலந்துகொண்டு பேசும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இந்த மாதம் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தனது பெரும்பான்மையை நிரூபித்த பின்னர், சபாநாயகருக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இலங்கை முதலீட்டுச் சபையின் பதவிகளுக்கு, ஓய்வுபெற்ற அரச அதிகாரிகள் அல்லது முன்னாள் படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் எவரும் நியமிக்கப்பட மாட்டார்கள்.

நாட்டை அபிவிருத்திப் பாதையில், கொண்டு செல்லும் நோக்கிலே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை மக்கள் பதவியிலமர்த்தியுள்ளனர் எனத் தெரிவித்தார்.

# அமெரிக்கத் தூதுவரின் கருத்துக்கு ரெலோ இயக்கம் கண்டனம்

(கொழும்பு)

அமெரிக்கத் தூதுவரின் கருத்தானது, தமிழ் மக்களின் வீரம் செறிந்த போராட்டத்துக்கு எதிரான சவாலாகும். ரெலோ இயக்கத்தின் திருகோணமலை மாவட்ட செயலாளர் கு.ரவீந்திரராஜா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அண்மையில் கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பின்போது, இலங்கை அரசாங்கம், இராணுவரீதியில் பலம் பொருந்தியதாக இருந்தால் மட்டுமே சமாதானப் பேச்சுக்களில் உறுதியாக இருக்கமுடியும் என்று தெரிவித்ததோடு, இராணுவரீதியாக இலங்கை அரசுக்குச் செய்கின்ற உதவிகளையும் விதந்துரைத்தார்.

அவரின் இத்தகைய செயலானது, இரத்தம் சிந்திய தியாக வரலாற்றைக் கொண்ட தமிழ் மக்களது போராட்டத்துக்கு எதிரானது என்று நாங்கள் கருதுகின்றோம்.

பேரினவாத சக்திகளுக்கு அழுத்தத்தைக் கொடுப்பதை விடுத்து, அவர்களைத் தட்டிக்கொடுத்து, தாலாட்டிக்கொண்டு தமிழ்மக்களின் போராட்டத்துக்கு எதிரான விஷ விதைகளை விதைப்பதை அமெரிக்கா நிறுத்திக்கொள்ளவேண்டும்.

ஈழத்தமிழ் மக்கள் - எந்த விலைகொடுத்தும், தமது மண்ணை மீட்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். வல்லாதிக்க அரசின் கனவுகளைத் தகர்த்தெறிவோம் என்பதை அமெரிக்கத் தூதுவருக்குக் கூறிவைக்க விரும்புகிறோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# சிறுபான்மைக் கட்சிகளை அழிக்கும் அரசின் இலக்கு வெற்றிபெறாது!



(கொழும்பு)

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

அரசாங்கம் சிறுபான்மை கட்சிகளை அழிக்கும் நடவடிக்கைளை முன் கொண்டு செல்வதன் மூலம் அது எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியாது என இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரம் ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய அவர், மேலும் தெரிவித்தாவது -

இலங்கை முஸ்லிம் காங்கிரஸை பலமிலக்க செய்ய அரசாங்கம் முனைந்ததை போன்றே கருணாவை பயன்படுத்தி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை வலுவிலக்க செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டது.

இதுவே இன்று சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாத கட்டத்துக்கு இலங்கையை கொண்டு சென்றுள்ளது. எனவே அரசாங்கம் சிறுபான்மை கட்சிகளை பலமிலக்க செய்து அதன்மூலம் தமது அரசியல் நலனைப்பேண முற்படுமானால், அது அரசாங்கத்துக்கே பாதகமாக அமையப்போகிறது.

இதேவேளை - நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் திட்டத்தை இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்துவருகிறது. எமது கட்சியைப் பொறுத்தவரையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையில் சில மாற்றங்களை கொண்டு வர விரும்புகிறது.

ஜனாதிபதியானவர் நாடாளுமன்றம் மற்றும், நீதிமன்றத்துக்கு பதில் சொல்ல வேண்டியவராக இருக்கும் வகையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமானால், அதனை முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்கும்.

அரசாங்க ஊழியர்களைப்போன்று ஜனாதிபதிக்கும் ஓய்வு பெறும் வயது தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## திருகோணமலை - கன்னியாவில்

# மிதிவெடி அகற்றும் பணிகளை விரைவாக முடிக்க வேண்டுகோள்

திருகோணமலை மாவட்டத்தில் மீள்குடியேற்றக் கிராமமான கன்னியா பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் பணிகளை விரைவாக முடிக்குமாறு திருகோணமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தைமாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்தவேலைத்திட்டம் 6 மாதங்களுக்குள் நிறைவுபெறும் என முன்னர் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், 6 மாதங்கள் கடந்தும் இந்தப் பணியில் அரைப்பங்கு கூட நிறைவு செய்யப்படவில்லை. இதனால் மக்கள் அச்சமின்றி மீளக்குடியேற முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

ஹலோ டிரஸ்ட் நிறுவனம், டனிஷ் கண்ணி வெடி அகற்றும் நிறுவனம், இராணுவம் என்பன இந்த மாவட்டத்தில் கண்ணிவெடி, மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. கன்னியா பிரதேசத்தில் டனிஷ் நிறுவனவே இந்தப் பணியில் ஈடுபட்டுவருகின்றது.

இதேவேளை கன்னியா பிரதேச செயலாளர் பிரிவில் எவ்வாறு கிராமத்தையும் கண்ணிவெடி - மிதிவெடி அகற்றப்பட வேண்டிய பிரதேசமாகக் கணக்கிட்டு, அந்தப் பகுதி மக்களையும் மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு இடம்பெயர்ந்த மக்கள் அரசாங்க அதிபரைக் கேட்டுக்கொண்டுள்ளனர். (04)

# அரசாங்க தரப்பில் சேர்ந்தால் கட்சியிலிருந்து நீக்கப்படுவர்!

## எம்.பிக்களுக்கு தொண்டமான் எச்சரிக்கை

அரசாங்கம் ஆட்சியைக் கொண்டு நடத்த ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெறவேண்டிய நிலையில் இருககிறது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தோ, இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலிருந்தோ எவரும் அரசாங்கத் தரப்பில் சேர்ந்துகொண்டால் அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவர் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாத தேவஸ்தான மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெறுமனே அமைச்சர் பதவியை மாத்திரம் பெறுவதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. எமது மக்கள் நலன் சார்ந்த விடயங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக அரசாங்கத் தரப்புக்குத் தெரிவித்துள்ளோம்.

எனவே, மாகாணசபைத் தேர்தலின் பின்னர் இது சம்பந்தமாக முடிவெடுக்கப்படும் என்றும், ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

# இறுதிப் போட்டியில் விளையாட கிறீஸ் அணி தகுதி பெற்றது!



(போர்ட்டோ)

போர்த்துக்கல் நாட்டில் நடைபெற்றுவரும் ஐரோப்பிய கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் செக் குடியரசைத் தோற்கடித்த கிறீஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.



நேற்று அதிகாலை நடைபெற்ற இந்தப் போட்டியில் -

செக் குடியரசு அணி தோல்வி எதுவுமே சந்திக்காமல் அரையிறுதிக்குத் தகுதிபெற்றிருந்தது. அதற்கு ஏற்றவாறு அந்த அணி வீரர்களின் ஆட்டமும் தொடக்கத்தில் இருந்தே அபாரமாக இருந்தது.

இந்தப் போட்டித்தொடரில் அதிக கோல் அடித்த பரோஸ், கோலர் ஆகியோர் தொடர்ந்து தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர். ஆயினும் கோல் அடிக்கும் பல வாய்ப்புக்களை அந்த அணி வீரர்கள் வீணடித்தனர்.

இதேபோல் கிறீஸ் அணி வீரர்க




ளுக்கும் கோல் அடிக்க வாய்ப்புக் கிடைத்தது. அவர்களும் அவற்றைத் தவறவிட்டனர்.

முதல் பாதி ஆட்டத்தில் கோல் எதுவும் விழவில்லை. இதேபோல் 2 ஆவது பகுதி ஆட்டத்திலும் கோல் விழாததால் கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டது.

கூடுதல் நேரத்தின் கடைசி நிமிடத்தில் கிறீஸ் அணிக்கு கோணர் வாய்ப்பு கிடைத்தது. வாசிலியோஸ் அடித்த பந்தை டெல்லாஸ் தலையால் மிகவும் அற்புதமாக கோல் அடித்தார்.


இதன்மூலம் கிறீஸ் 1-0 என்ற கோல் கணக்கில் வென்று செக் குடியரசை அதிர்ச்சிகரமாகத் தோற்கடித்தது. அந்த அணி முதல்முறையாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. ஐரோப்பிய கிண்ண வரலாற்றிலேயே முதல் முறையாக சில்வர் கோல் முறையில் வெற்றி தீர்மானிக்கப்பட்டது இதுவே முதல்



முறையாகும்.

கிறீஸ் அணி வீரர் கரகோலிஸ் இந்தப் போட்டியில் நான்காவது தடவையாகவும் நடுவரால் மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டதால் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை இழந்தார்.

இந்தப் போட்டியைக் காண சுமார் 42 ஆயிரத்து 500 ரசிகர்கள் மைதா



னத்தில் குழுமியிருந்தனர்.

கிறீஸ் அணி காலிறுதியில் தற்போதைய சம்பியனான பிரான்ஸை தோற்கடித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அரையிறுதி ஆட்டத்தில் போர்த்துக்கல் 2-1 என்ற கோல் கணக்கில் ஹொலண்ட் அணியையும், கிறீஸ் 1-0 என்ற கோல் கணக்கில் செக் குடியரசையும் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

ஐரோப்பிய உதைபந்தாட்ட இறுதிப் போட்டி லிஸ்பன் நகரில் நாளை நடைபெறவுள்ளது. இதில் போர்த்துக்கல் - கிறீஸ் அணிகள் மோத



வுள்ளன.

ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டம் மற்றும் உலகக் கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் முதல் முறையாக தொடக்க ஆட்டத்தில் மோதிய அணிகள் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

இறுதிப் போட்டியில் மோதும் போர்த்துக்கல்,. கிறீஸ் அணிகள் 'ஏ' பிரிவில் இடம்பெற்றிருந்தன. லீக் ஆட்டத்தில் கிறீஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கலை வெற்றிகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

-விம்பிள்டன் ரெனிஸ்-

## அரையிறுதி போட்டியில் செரீனா - ஷெரபோவா!



லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் ரெனிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் அரையிறுதி ஆட்டங்களில் மோதிய செரீனா வில்லியம்ஸ் மற்றும் மரியா ஷெரபோவா ஆகியோர் வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெற்றனர். விம்பிள்டன் ஆட்டத்தில் பெண்கள் ஒற்றையர் அரையிறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது.

ஒரு அரையிறுதி ஆட்டத்தில் முதல் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், 4 ஆம் நிலை வீராங்கனையான அமெய்லி மவ்ரஸ்மோ ஆகியோர் மோதினர்.

இதில் செரீனா 6-7(4-7), 7-5, 6-4 என்ற செட் கணக்கில் போராடி வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு அரையிறுதியில் 5 ஆம் நிலை வீராங்கனையான லின்ட்சே டேவன்போர்ட், 13 ஆம் நிலை வீராங்கனையான மரியா ஷெரபோவாவை எதிர்த்து மோதினார்.

இதில் ஷெரபோவா 2-6, 7-6(7-5) 6-1 என்ற செட் கணக்கில் டேவன் போர்ட்டை அதிர்ச்சிகரமாகத் தோற்கடித்தார். இதன்மூலம் அவர் முதல் முறையாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.




நட்வெஸ்ட் தொடர்

## மேற்கிந்தியத் தீவுகள் அணியை இங்கிலாந்து வெற்றிகொண்டது

(லண்டன்)

இங்கிலாந்தின் ஹெடிங்லே மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நட்வெஸ்ட் முத்தரப்பு கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்



றில் மேற்திந்தியத் தீவுகள் அணியை 7 விக்கெட்டுக்களால் இங்கிலாந்து அணி வெற்றிகொண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் மேற்கிந்தியத் தீவுகள் அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்கள் துடுப்பாட்டத்தை ஆரம்பித்ததும் இங்கிலாந்து அணியின் பந்துவீச்சாளர்கள் தமது மாயாஜாலப பந்துவீச்சால் மடக்கினர்.

இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரிந்து கொண்டிருந்தன. முன்னணி ஆட்டக்காரர்கள் கூட நின்று பிடிக்க முடியாமல் திணறினர்.

இதனால் 40.1 ஓவர்களிலேயே மேற்கிந்தியத் தீவுகள் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. இதில் 14 ஓட்டங்கள் உதிரிகளாகக் கிடைத்தவையாகும்.

இந்த அணி சார்பில் கெய்ல் 23, சர்வான் 46, பவல் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் இங்கிலாந்து வீரர்கள் ஹர்மிசன் மற்றும் அன்டர்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் டரன் கோ, ட்ரஸ்கொதிக் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்

160 ஓடடங்கள் என்ற சுலபமான இலக்குடன் களத்தில் இறங்கிய இங்கிலாந்து அணியினர் 22 ஆவது ஓவரிலேயே 160 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றனர்.



இதில் உதிரிகளாக 20 ஓட்டங்களை இங்கிலாந்து பெற்றிருந்தது.

ட்ரஸ்கொதிக் 55, வோகன் 14, ஸ்ரைரஸ் 44, பிளின்ரொப் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் பிராவோ 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இரண்டாவது நாளிலேயே

## அவுஸ்ரேலிய அணியும் 201 ஓட்டத்துடன் சுருண்டது!

அவுஸ்ரேலிய - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸில் 201 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது.


இந்த டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி களத்தடுப்பில் ஈடுபட்டது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்ரேலிய அணி 71.3 ஓவர்களிலேயே 207 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்,. நு.

வாஸ் 5 விக்கெட்டுக்களையும், மாலிங்க 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி மளமளவென விக்கெட்டுக்களை இழந்தது.

இதனால் 41.5 ஓவர்களிலேயே 97 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இலங்கை அணி சார்பில் டில்ஷான் மட்டுமே ஆகக்கூடுதலாக 17 ஓட்டங்களைப் பெற்றார்.



இதையடுத்து நேற்று இரண்டாவது நாளில் இரண்டாவது இனிங்ஸை அவுஸ்ரேலிய அணி விளையாடியது.

ஆயினும் 63.1 ஓவர்களிலேயே அவுஸ்ரேலிய அணி 201 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

அதிகபட்சமாக லேமன் 51 ஓட்டங்களையும், கில்கிறிஸ்ட் 80 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மாலிங்க 4 விக்கெட்டுக்களையும், வாஸ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

311 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி இன்று மூன்றாவது நாள் ஆட்டத்தைத் தொடரும்.

கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டம்

## இறுதிப் போட்டிக்கு றோயல் அணி தெரிவு!

கரும்புலிகளின் நினைவாக தீருவில் மைதானத்தில் வல்வை விளையாட்டுக்கழகம் நடத்திவரும் மின்னொளியிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

இதில் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றோயல் விளையாட்டுக்கழகம் மோதியது.

முதல் பாதியாட்டம் இரு பக்கம் கோல் தடுப்பாளருக்குமான விளையாட்டாக இருந்தது. இரு அணியினரும் ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல என்ற நிலையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இருந்தபோதும் பாடுமீன் அணியின் கோல் காப்பாளரின் அபார தடுப்பு அனைவரது பாராட்டையும் பெறக்கூடியதாகவும் இருந்தது.

முதல் பாதி ஆட்டத்தின் போது இரு அணிகளும் எதுவித கோலும் அடிக்காத நிலையில் இரண்டாவது பாதி தொடங்கியது.

இடைவேளையின் பினன் ஆட்டம் தொடங்கப்பட்டபோது, 25 ஆவது நிமிடத்தில் றோயல் விளையாட்டுக் கழக அணி வீரர் சிவநேசன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி எதிர்பாராத விதமாக ஒரு கோலை அடித்தார்.

அதன்பின்னர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணி வீரர்கள் அபாரமாக ஆடியபோதும், கோல் எதனையும் பெறமுடியாத நிலையில் றோயல் விளையாட்டுக்கழகம் - பாடுமீன் விளையாட்டுக்கழகத்தை 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து இறுதியாட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த இறுதியாட்டத்தின்போது - காட்சிப்போட்டியாக மனோகரா விளையாட்டுக்கழகமும், டையமன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)


### கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கே.சி.சி.சி விளையாட்டுக்கழகம் மறைந்த கல்விப் பணிப்பாளர் ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்ட கழகங்களிடையே நடத்தும் 6 வீரர்கள் பங்குபற்றும் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வருட சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தின் முக்கிய 15 கழகங்கள் பங்குபற்றுகின்றன. கடந்த வருடம் நடைபெற்ற சுற்றுப்போட்டியில் யங்ஸ்ரார் கழகம் சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது. (58)

# கட்டத்தை நிரப்புங்கள்

1. ஒருநாளின் நேரத்தை அளவிடும் கருவி
2. மணம் இல்லாத சிவந்த மஞ்சள் நிறப்பூ
3. தாள்
4. இனிப்பு அல்லது கார வகைத் திண்பண்டம்.




# புதினப் பத்திரிகையின் சுயசரிதை

பத்திரிகை ஆகிய நான் வைக்கோலில் பிறந்தேன். வைக்கோலைக் கூழாக்கி, அதிலிருந்து என்னை உற்பத்தி செய்தார்கள். ஆரம்பத்தில் மங்கலாகக் காட்சி அளித்தேன். பின்னர் எனக்கு ஏதோ ஒரு பவுடர் பூசி, பால் போன்ற வெள்ளை நிறம் ஆக்கினார்கள். என் போன்ற நண்பர்கள் அங்கே கட்டுக்கட்டாக கட்டி வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் எங்களை ஒரு லொறியில் ஏற்றி ஒரு கடையில் விற்றனர்.

அவர் கண்ணாடிப் பெட்டியில் எங்களை அழகாக அடுக்கி வைத்தார். அங்கே வந்த பத்திரிகை நிறுவனத்தார் ஒருவர் விலைபேசி, தனது பத்திரிகைக் காரியாலத்துக்கு வாங்கிச் சென்றார். அங்கே இயந்திரங்கள் மூலமாக எம்மீது பல வர்ணங்களில் எழுத்துக்களை அச்சுப்பதித்தார்கள். அப்பொழுது நாங்கள் புதினப்பத்திரிகைகள் ஆனோம். அதிகாலை நேரம் எங்களை வானில் ஏற்றி, பத்திரிகைகள் விற்கும் கடையில் கொடுத்தார்கள். அங்கே வந்த மக்கள் எங்களை அதிக பணம் செலுத்தி முந்திக் கொண்டு வாங்கிச் சென்றனர். மிகுந்த ஆவலோடு அவர்கள் எங்களைப் படித்தார்கள். அவர்கள் வீட்டில் உள்ளவர்கள் ஆசையுடன் அரவணைத்துப் படித்தார்கள். பின்னர் என்னை ஒரு மூலையில் தூக்கிப் போட்டார்கள். அங்கே என்னைப்போல பலர் கட்டிவைக்கப்பட்டிருந்த சொற்ப நேரத்தில் நானும் அந்தக் கட்டுக்குள் அகப்பட்டுக் கொண்டேன்.

ஒரு நாள் அந்த வீட்டுக்காரர் எங்களை எல்லாம் கடைக்கு எடுத்து சென்றார். அங்கே தராசின் மீது ஏற்றி எங்களை நிறுத்துக் கொடுத்துவிட்டு பணத்தைப் பெற்றுச் சென்றார். கடை முதலாளி எங்களை சிறிது சிறிதாகக் கிழித்து வைத்தார். கடையில் பொருட்கள் வாங்க வருபவர்களுக்கு பொருட்களைச் சுற்றிக் கொடுத்தார். அந்தவகையில் நான் இப்பொழுது குப்பையில் உள்ளேன். என்றைக்கோ ஒரு நாள் என் உடல் தீயில் கருக ஆயத்தமாக உள்ளது.

ச.சக்தி்தர்ஷினி, தரம் 5
கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

# சித்திரக்கதை


## சுமை தூக்கச் சுருக்கு வழி



1. பழங்களை எப்படிக் கொண்டு போவேன் யோசித்தது முள்ளம்பன்றி



2. அத்தனையையும் எப்படிச் சுமப்பேன்? யோசித்தபடி மரத்திலேறியது முள்ளம்பன்றி



3. தொப்பென விழுந்தது குவியல் மேல்



4. எல்லாப் பழங்களையும் சுமந்து சென்றது

இங்கே மடிக்கவும்



**சிந்தனைக்கு!**
காரியம் வெற்றி அடைய வேண்டுமானால் எண்ணித் துணிவதும், துணிந்தபின் ஏற்படும் துயரங்களைக் கண்டு துவளாமல் இருப்பதே ஆகும்.



# சிறுவர் அரங்கம்

# பொம்மைக் கப்பல்



**வா**சுவின் வீட்டருகே அழகான தொரு ஆறு ஓடியது. சலசல வென்று சத்தம் எழுப்பியவாறே பாய்ந்து ஓடும் நீல ஆற்றிலே, ஆனந்தமாக நீந்தி விளையாடுவான் வாசு.

வாசு ஒரு நாள் பொம்மைக் கப்பல் ஒன்றைக் கட்டினான். பொம்மைக் கப்பலில் தனது பொம்மை முயலாரை இருத்தி வைத்தான்.

அமைதியாகப் பாய்ந்தோடும் நீல ஆற்றிலே பொம்மைக் கப்பலை ஓட விட்டான். ஆற்றிலே மிதந்து பயணப்பட்ட பொம்மைக் கப்பலை, ஒரு சிட்டுக் குருவியார் பார்த்தார்.



கப்பலின் அருகே வந்து அதை வியப்போடு பார்த்த சிட்டுக் குருவியார், கப்பலில் அமர்ந்திருந்த பொம்மை முயலுடன் சேர்ந்து, தானும் பொம்மைக் கப்பலில் ஏறி பயணம் செய்திட ஆசைப்பட்டார்.

பொம்மைக் கப்பலின் கொடிக் கம்பத்திலே வசதியாக அமர்ந்து பயணம் செய்தார் சிட்டுக் குருவி யார்.

ஆற்றிலே நீந்தி விளையாடிக் கொண்டிருந்த வாத்தார் ஒருவர் பொம்மைக் கப்பலின் அருகே வந்தார்.

சிட்டுக் குருவியாரே நானும் உம்மோடு சேர்ந்து கப்பலில் வரலாமா? என்று ஆசையோடு சிட்டுக்குருவியாரிடம் கேட்டார்.

சிட்டுக்குருவியார் - சம்மதம் சொல்லியதால், வாத்தாரும் கப்பலில் ஏறிக்கொண்டார். ஆற்றில் மிதந்து சென்ற பொம்மைக் கப்பலின் அருகே வந்த பச்சைத் தவளையார் ஒருவர் - தானும் பொம்மைக் கப்பலில் ஏறிப் பயணம் செய்திட ஆசைப்பட்டார்.

அதற்குச் சிட்டுக்குருவியாரும், வாத்தாரும் மகிழ்ச்சியோடு சம்மதம் சொன்னார்கள்.

சிட்டுக்குருவியாரும் வாத்தாரும், பச்சைத் தவளையாரும் செல்லும் வழியிலே ஒரு பென்னம் பெரிய மீனாரைக் கண்டார்கள்.

பென்னம்பெரிய மீனார் பொம்மைக் கப்பலில் ஏறித் தானும் உல்லாசமாகப் பயணம் செய்திட ஆசைப்பட்டார்.

ஆற்றிலே நீச்சல் அடித்து தனக்கு அலுத்துப் போய் விட்டது என்று அவர் கவலையோடு சொன்னார்.



மீனாரே நீரும் எமது கப்பலில் ஏறிக்கொள்ளும் என்று சிட்டுக்குருவியாரும், வாத்தாரும், பச்சைத் தவளையாரும் சொன்னார்கள்.

பென்னம்பெரிய மீனார் மகிழ்ச்சியோடு பொம்மைக் கப்பலில் தாவி ஏறினார். மீனாரது பாரத்தைத் தாங்க முடியாது பொம்மைக் கப்பல் ஆற்றிலே மூழ்கத் தொடங்கியது.



அழகான பொம்மைக் கப்பல் ஆற்றிலே விரைந்து மூழ்கியது.

சிட்டுக்குருவியார் சிறகடித்துப் பறந்தார். வாத்தாரும் பச்சைத் தவளையாரும், பென்னம்பெரிய மீனாரும் ஆற்றிலே குதித்து நீந்தினார்கள். பொம்மை முயலோ வேகமாய் ஓடும் ஆற்று நீரிலே வேகமாய் அடித்துச் செல்லப் பட்டது.

யாராவது வந்து எமது நண்பன் பொம்மை முயலுக்கு உதவி செய்திடுங்கள் என்று சிட்டுக்குருவியார் கத்தினார். ஆற்றுத் தண்ணீரிலே சிக்கித் தவித்த பொம்மை முயலைப் பார்த்த சிட்டுக்குருவியாருக்கு மிகவும் கவலையாய் இருந்தது.



ஆற்றின் கரையிலே நின்ற வாசு தனது பொம்மைக் கப்பல் மூழ்கியதையும், பொம்மை முயல் ஆற்றுத் தண்ணீரிலே சிக்கித்தவிப்பதையும் கண்டான்.

விரைந்து ஆற்றிலே இறங்கிய வாசு - பொம்மை முயலை தண்ணீரிலிருந்து மீட்டெடுத்தான்.

தனது அருமைப் பொம்மை முயலைப் பார்த்த வாசு - என தருமை முயலே நீ கவலைப்படாதே, அழகான தொரு கப்பலை நான் உனக்கு மீண்டும் கட்டித் தருவேன் என்று சொன்னான். வாசுவின் அருகில் நின்ற சிட்டுக்குருவியாரும், வாத்தாரும், பென்னம்பெரிய மீனாரும் வாசு சொன்னதைக் கேட்டு மகிழ்ச்சியோடு கைதட்டிச் சிரித்தார்கள்.




*பொம்மைக் கப்பல், பொம்மைக் கப்பல்*
*வாசு கட்டிய பொம்மைக் கப்பல்*
*பொம்மை முயலார் பயணம் செய்திட*
*வாசு கட்டிய பொம்மைக் கப்பல்.*

என்று சந்தோசத்தோடு பாட்டுப்பாடினார் சிட்டுக்குருவியார். அவரது பாட்டுக்கு - ஏற்ற தாளம் போட்டு வாத்தாரும், பச்சைத் தவளையாரும் கூடவே பென்னம்பெரிய மீனாரும் நாட்டியம் ஆடினார்கள்.

- யோ.சத்தியன்

## அன்புள்ள சிறுவர்களே!

உங்களில் அநேகமானவர்கள் பரீட்சை நெருங்கும் பொழுதுதான் எல்லாப் பாடங்களையும் ஒன்றாகச் சேர்த்துப்படிக்க முயலுகிறீர்கள். இது பதட்டத்தையும், தேவையற்ற மனச்சோர்வையும் ஏற்படுத்தும். கூடவே தேர்வுப் பயத்தையும் ஏற்படுத்தும். எனவே, பாடசாலையில் எவ்வாறு உங்களுக்கு ஒரு நேர அட்டவணை உண்டோ. அதுபோல் நேர அட்டவணையை வீட்டிலும் பின்பற்றுங்கள். இதன்மூலம் நேரத்தைச் சிறப்பாகக் கற்கப் பயன்படுத்த முடியும்.



முதலில் உங்களுக்குப் பிடித்த அமைதியைத் தரும் இடத்தைத் தேர்ந்தெடுங்கள். தனிமையில் இருந்து மீண்டும் ஒரு தடவை பாடங்களைப் பார்ப்பது பயன் தரும். பாடசாலையில் படித்த பாடங்களை ஒருமுறை மீளப்படித்து குறிப்பெடுக்கவும், ஞாபகப்படுத்தவும் உதவும். அப்போதுதான் விளங்காததை விளங்கிக்கொளவும், புரியாததை அடுத்தநாள் ஆசிரியரிடம் விளக்கம் கேட்க முடியும். ஆரம்பத்தில் சிரமமாக இருந்தாலும் ஒழுங்குமுறையில் ஒவ்வொரு நாளும் தொடர்ச்சியாகப் படித்துக்கொண்டுவர உங்களுடைய மனம் இயல்பாகவே ஒரு நிலைப்படுவதைக் காண்பீர்கள்.

குறைந்தது ஒரு மணித்தியாலமாவது ஒரு இடத்தில் அமர்ந்திருந்து படிக்கவேண்டும். பின்னர் சிறிதுநேர ஓய்வின்பின் தொடரலாம். பாடத்தை முழுக்க ஒருதரம் வாசியுங்கள். அதன்பின் பகுதி பகுதியாகப் படிக்கலாம். சில பாடங்களை விளங்கிக்கொண்டால் போதும். ஆனால் விதிகள், செய்யுள்வரிகள் போன்றவற்றை மனப்பாடம் செய்து பயன்படுத்துவது நல்லது. ஏனையவற்றை விளங்கி வைத்திருங்கள். இவ்வாறு செய்வதன் மூலம் எல்லா வகையான கேள்விகளுக்கும் விடையளிக்க முடியும்.

ஓரிரு பாடங்களுக்கு மட்டும் நல்ல புள்ளிகள் எடுப்பது, ஏனைய பாடங்களில் குறைவாக எடுப்பது நல்லதா? ஆனபடியால் எல்லாப் பாடங்களுக்கும் ஒரேயளவு கவனம் செலுத்துங்கள். கஷ்டமான பாடங்களுக்கு கூடுதல் அக்கறை செலுத்தவேண்டும்.

பாடங்களைச் சுருக்கமாக குறிப்பெடுத்து எழுதி வைத்துக்கொள்ளுங்கள். பின்னர் எழுதிப்பாருங்கள். இது உங்கள் கைவிரல்களுக்கு ஒரு பயிற்சி. படித்ததை நினைவுகூர ஒரு பயிற்சி. உங்களுக்கு நம்பிக்கையும் ஏற்படும். இதன்மூலம் உற்சாகம் ஏற்பட்டு, ஒவ்வொரு பாடத்தையும் கருத்துடன் தவறின்றிப் படிக்கமுடியும். இதன்மூலம் தேர்வுப் பயத்தைப் போக்கலாம்.

பழைய வினாத்தாள்களுக்குப் பதில் எழுதித் திருத்திப் பாருங்கள். வகுப்பில் மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். தெரியாத மாணவர்களுக்கு சொல்லிக் கொடுங்கள். நேரம் கிடைக்கும்பொழுது இரண்டு மூன்று பேர் குழுவாகச் சேர்ந்து படித்தவற்றை மீட்டுப் பாருங்கள்.

வாசித்து விளங்குங்கள்,
விளங்கிய பின் வாசியுங்கள்
பின்னர் எழுதிப் பாருங்கள் - இது தான் படிப்பின் இரகசியம். இதுதான் ஞாபகசக்தியை செம்மையாக்கவும், நேரத்தைச் சிறப்பாக கற்பதற்கும் உதவி புரியும்.

பாசமுடன் - சாரு அக்கா

## கூடி விளையாடு

கே.வி.குணசேகரம்



அருணன் நாய் ஒன்றை வளர்த்தான் அதற்கு வீமன் என்று பெயர் வைத்தான்.

பூனை ஒன்றையும் வளர்த்தான். அதற்கு கதிர் என்று பெயர் வைத்தான். அவற்றின் மீது அளவிலா அன்பை வைத்திருந்தான். வீமனும், கதிரும் அன்பாக இருந்தனர்.

மாலை வேளைகளில் அருணன் கதிருடனும், வீமனுடனும் பந்து எறிந்து விளையாடுவான். பந்தை உருட்டி விளையாட கதிருக்கு விருப்பம். விளையாடும்போது கதிருக்கும், வீமனுக்கும் சண்டை வரும்.


அருணன் பந்தை எறிவான், வீமன் விரைவாக ஓடும். வாயில் பந்தைக் கவ்வி, பந்துடன் விரைவாக ஓடிவரும். அருணனிடம் பந்தைக் கொடுக்கும். மகிழ்வுடன் வாலையாட்டும், மறுபடியும் பந்தை எறியச் சொல்லும் அருணன் பந்தை உருட்டுவான். கதிர் அதைக் காலால் உருட்டும்.
வீமன் குறுக்கே பாயும் பந்தைக் கவ்வும்.
''வீமா, கதிரை விளையாட விடு''
''மாட்டன் விடமாட்டன்''

சேர்ந்து விளையாடுங்கள் ஒற்றுமையாக விளையாட வேண்டும். அப்பொழுது தான் மகிழ்ச்சியாக இருக்கும். வீமன் பந்தைக் கவ்வியது கதிரிடம் கொடுத்தது. அவை சேர்ந்து விளையாடின


(தொடரும்...)

## மூளைக்கு வேலை

எத்தனை முக்கோணங்கள் இதில் உள்ளது?



மூளைக்கு வேலை
சென்றவார விடைகள்




## உங்கள் கைவண்ணம்



ச.அருள்மலர்
தரம் - 5
இணுவில் மத்திய கல்லூரி



சி.திருபன்
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி

இங்கே மடிக்கவும்



## எண்ணித் துணிக

பேசுவதற்கு முன் செவிகொடுங்கள்.
எழுதுவதற்கு முன் சிந்தியுங்கள்.
குறைகூறுவதற்கு முன் பொறுத்திருங்கள்.
பிரார்த்தனை செய்யுமுன் மன்னியுங்கள்.
எதையும் கைவிடுமுன் முயலுங்கள்.
மரணத்திற்கு முன் மற்றவர்களுக்கு உதவுங்கள்.

யோ.மிதுலா
தரம் 10
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

## விடுகதைகள்

1. என்னில் ஆயிரம் ஓட்டை உண்டு . ஆனாலும் ஆறு, கடலில் போட்டால் அள்ளிக் கொண்டு வருவேன். நான் யார்?

2. திடப் பொருளைப் பிடித்து வைத்துக் கொள்வான். திரவ விடயத்தில் மட்டும் கோட்டை விட்டு விடுவான். அவன் யார்?

3. அழிக்கும் பணி கொண்ட இவனுக்குப் பள்ளிப் படிப்பில் தனியிடம் உண்டு. அவன் யார்?

**விடைகள்**

1) வலை - 2) அரிதட்டு 3) இறப்பர்

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைநது அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாண வர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர்ப் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச் சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியஙகளை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்திசெய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :................................
கற்கும் பாடசாலை :................................
கற்கும் தரம் :................................
வீட்டு முகவரி :................................

................ ........ ................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் திகதி மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :................................
கற்கும் பாடசாலை :................................
கற்கும் தரம் :................................
வீட்டு முகவரி :................................
பிறந்த திகதி :................................
ஆர்வமுள்ள துறைகள் :................................

................ ................
திகதி ஒப்பம்

................ ................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## சென்றவார புதிர் விடைகள்

1. 5 அரிசி மூட்டைகள் (5x100) = 500
1 பருப்பு மூட்டை (1x30) = 30
உமி மூட்டை (94x15) = 470
= 1000

2. 45 வயது. 45 கூட்டினால் வரும் தொகை 9. திருப்பிப் போட்டால் 54. 54 க்கும், 45 க்கும் இடையில் உள்ள வித்தியாசம் 9.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
5இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ். பல்கலைக்கழக மருத்துவ பட்டதாரிகள் தென் பகுதிகளிலேயே சேவையாற்ற ஆர்வம்!

## சுகாதார அமைச்சு கவலை தெரிவிப்பு

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறுகின்ற மருத்துவப் பட்டதாரிகள் வடக்கு - கிழக்கிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்ற முன்வருவதில்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என சுகாதார அமைச்சர் நிமல் நிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன், இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் கவனத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக உள்ளூரில் இயங்குகின்ற வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதி நிதிகளை அமைந்து கலந்துரையாடிய போதே அவர்கள் இது குறித்து, விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

வடக்கு - கிழக்கு, தெற்கு எனப் பாரபட்சம் காட்டாது எல்லாப் பிரதேச மக்களுக்கும் சிறந்த சுகாதார சேவைகளை வழங்கவே பாடுபடுகிறோம். ஆனாலும் வடக்கு - கிழக்கிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மருத்துவப் பட்டதாரிகளுக்கும் பெரும் பற்றாக்குறை நிலவி வருகிறது.

இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக 243 மருத்துவ பட்டதாரிகளை அங்குள்ள வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு நியமித்துள்ளோம். இவர்கள் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள்.

ஆனால், யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறுகின்ற மருந்துவப் பட்டதாரிகள் தென் பகுதியிலுள்ள அரசாங்க வைத்திய சாலைகளில் கடமையாற்றவே விரும்புகின்றனர். இவர்கள் வடக்கு - கிழக்கிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்ற விரும்பாமை தனக்குக் கவலையளிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## எழுச்சிப் பேரவை கூட்டம்

தெல்லிப்பளை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினருக்கான கலந்துரையாடலொன்று இன்று அளவெட்டி மகாஜனா சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தெல்லிப்பளைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ். தனபாலசிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் தேசிய எழுச்சிப் பேரவையினரால் சேகரிக்கப்பட்டு வரும் -போரினால் இறந்த மற்றும் காணாமற் போனோர் தொடர்பான விபரங்களும், கிராமியமட்ட நியாப்திட்ட அபிவிருத்தி தொடர்பான அறிக்கை சமர்ப்பிப்புக்களும் இடம்பெறவுள்ளன. (94)

## வலி. வடக்கு சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களுக்கான கூட்டம்

எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப் படவுள்ள உள்ளூராட்சி வார வேலைத் திட்டங்களைச் சிறப்பாக நடாத்துவதற்கு சனசமூக நிலையங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காகவும், சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை வழங்குவது தொடர்பாகவும் நிலையத் தலைவர், செயலாளர்களுக்கான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வலி. வடக்கு பிரதேச சபைத் தலைமைச் செயலகத்தல் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி. வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட மக்களின் பங்களிப்புடன், மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய வேலைத்திட்டங்கள் அமுல் படுத்தப்படவுள்ளன.

சிரமதானம், பொது மக்களுக்கான கலந்துரையாடல், சிறந்த உணவகங்களைத் தெரிவதற்கான போட்டி, நூலகக் கண்காட்சி, கலை நிகழ்ச்சி, விளையாட்டுப் போட்டி, கட்டுரைப் போட்டி, மரம் நடுகை, சனசமூக நிலையங்களை ஒன்றிணைத்து கருத்தரங்குகளை நடாத்துதல் ஆகிய செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## நூலக டிப்ளோமா கற்கைக்கு தெரிவான 58 பேரின் விபரம்

(மானிப்பாய்)

இலங்கை நூலகச் சங்கத்தினால், யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா தராதர தரம்-1 பயிற்சி நெறிக்குத் தெரிவானவர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த டிப்ளோமா கற்கைநெறிக்கு நூற்றுக்கும் அதிகமானோர் விண்ணப்பித்திருந்தும் நேர்முகப் பரீட்சையின் மூலம் 58 பேர் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கற்கைநெறிக்குரிய பணம் கட்டும் படிவத்தினை, இலங்கை நூலகச் சங்கத்தின் இணைப்பாளர், த. சிறிதரனிடம் யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தெரிவான 58 பேரின் பெயர் விபரம் வருமாறு -

சுரேந்திரன் சின்னராஜா, சிவாணந்தன் தருமராஜா, திலீபன் சுவாமிநாதன், ரவிக்குமார் தெய்வேந்திரன், மதுமதி தர்மபாலன், ராஜேஸ்வரன் சுப்பிரமணியம், சரவணபவன் சபாரட்ணம், கார்த்திகா ராகவன், இறன்ஸ் சிறோமி, றோஜர் துஷியந்தன், ராதிகா வேலுப்பிள்ளை, கஸ்தூரி செல்வநாதன், சிந்துஜா மகாலிங்கம், துர்க்கா பேரின்பநாயகம், தமயந்தி துரைராஜா, தாட்சாயணி நடராஜா, உதயதர்சினி சற்குணசிங்கம், பார்தி காராளசிங்கம், ரஞ்சனா குணரட்ணம், செந்தூரதேவி கோபால், கலைச்செல்வன் தனபாலசிங்கம், வைதேகி சுந்தரராஜன், சசிதா நடராஜா, ஜமகேஸ்வரன் கணபதிப்பிள்ளை, ஜெயசோதி கணபதிப்பிள்ளை, உஷாளினி சந்திரகுலசிங்கம், ஜெய்ந்தி நடராஜா, மணிவண்ணன் நல்லதுரை, லதா பத்மநாதன், சாள்ஸ் நவரட்ணம் கெயின்சாள்ஸ், சுரேஷ்குமார் சுப்பிரமணியம், விஜய சொரூபி, ஜமுனாமலர் சந்திரசேகரம், தேன்மொழி தவராஜா, நிஷாயினி பரமசாமி, வாசுகி மதியாபரணம், கவிதா கணேசமூர்த்தி, பார்த்தசாரதி இராஜேஸ்வரன், சுகிர்தா சிவநாதன், தர்மிலா சந்திரசேகரம், வித்யா சண்முகலிங்கம், மீரா பார்த்தீபன், அமிர்தவாசனி கிருஷ்ணானந்தன், சாளினி சண்முகம், ரஜீபன் குலசிங்கம், கணேசலிங்கம், வேதநாயகம், தினேஷ் சபாபதிப்பிள்ளை, பிரியதர்சினி, வெற்றிவேல் விநாயகமூர்த்தி, றுஜினா பாக்கியநாதன், நளினி நகுலேஸ்வரன், மனாதீபன் திருக்குணானம், சுகிர்தா சந்திரசேகரம், சுபைதா ஆனந், கிரிதரன் விஷ்ணுமூர்த்தி, சுதாமதி தேவமனோகரன், தேவரஞ்சினி விநாசித்தம்பி, சுபாஜினி சந்திரகுமார். (100)

## கொழும்பு பங்குச் சந்தைக் கிளை யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும்!

### ஆராயும் குழு வருகிறது

கொழும்பு பங்குச்சந்தை கூடும் நேரம் நேற்றுமுன்தினம் முதல் ஒரு மணித்தியாலயத்தால் நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி வழமையாக வேலை நாட்களில் காலை 9.30 மணி முதல் மதியம் 12.30 வரை மட்டுமே இருந்த பங்குச்சந்தை நேரம் 1 மணித்தியாலய அதிகரிப்பை தொடர்ந்து, மதியம் 1.30 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர அதிகரிப்பு பங்குத் தரகர்களின் வேண்டுகோளின் படி நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கொழும்பு பங்குச்சந்தை கடந்த காலங்களில் ஏற்பட்ட உயர்வுக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்ட இந்த நேர அதிகரிப்பினை முதலீட்டாளர்கள் பெரிதும் வரவேற்றுள்ளார்கள்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் விரைவில் ஆரம்பிக்க இருக்கும் கொழும்பு பங்குச்சந்தையின் கிளை நிறுவனத்தின் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக இந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று எதிர்வரும் 19ஆம் தகிதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இந்தப் பிரதிநிதிகள் இங்கு பங்குச்சந்தை மற்றும் அரச திறைசேரி உண்டியல் தொடர்பான விசேட விளக்கக் கருத்தரங்குகளை நடாத்தவுள்ளனர்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் கொழும்பு பங்குச்சந்தை யின் அனைத்து பங்குகளின் குறி காட்டி 8.84 புள்ளிகளினாலும், மிலங்கா பங்குகளின் குறிகாட்டி 22.25 புள்ளிகளினாலும் அதிகரித்துள்ளது. இதன்படி நேற்றைய சந்தை முடிவில் குறிகாட்டிகள் முறையே 1366.49, 2091.46 புள்ளிகளாகக் காணப்பட்டது.

## நீதிமன்றம் அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவரை விசாரணை செய்த நீதிவான் இந்தக் குற்றச்சாட்டுக்காக மூவாயிரம் ரூபாவை அபராதமாக விதித்தார். (29)

## புதிய கல்வித்திட்டத்தை துரிதப்படுத்த ஊக்குவிப்புத் திட்டம் அறிமுகம்

பிரதேச செயலர் ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் புதிய கல்வித் திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்த ஊக்குவிப்புத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முதற்கட்டமாக 50 நவோதய பாடசாலைகள் தெரிவு செய்யப்படவுள்ளன.

இந்தப் பாடசாலைகளில் நூல் நிலையங்கள், தகவல் தொழில்நுட்ப கூடங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள் என்பன நிறுவப்படுவதுடன் அந்தப் பாடசாலைகளின் ஆசிரியர் வளங்களும் பூர்த்திசெய்யப்படும் என அமைச்சு அறிவித்துள்ளது. (122)



நேற்று கோண்டாவில் நடைபெற்ற சிவபூமி பாடசாலை திறப்பு விழாவில் கலந்துகொண்ட நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்துவதையும், பாடசாலையில் புதிதாக இணைந்த மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## அழகெழல் போட்டி திகதிகளில் மாற்றம்

பாடசாலைகளிடையே நடைபெறவிருக்கும் தமிழ்த்தினப் போட்டிக்கு வசதியாக - யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியினால் நடத்தப்படவிருந்த அழகெழல் கலைசார் போட்டிகளுக்கான திகதிகள் மாற்றப்பட்டுள்ள.

எதிர்வரும் 9, 10ஆம் திகதிகளில் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்ட போட்டிகள் முறையே எதிர்வரும் 24, 25 ஆகிய திகதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. போட்டிகள் அன்றையதினம் காலை 9 மணிமுதல் நடைபெறும்.

போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னராக அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஆயுட் காப்புறுதி தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றம், கல்வித் திணைக்கள அனுசரணையுடன் ஆயுட் காப்புறுதி தொடர்பான கருத்தரங்கு ஒன்றை வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை நடத்தவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் அனைத்து பாடசாலை ஆசிரியர்களும், மற்றும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களும் பங்கு பற்றிப் பயனடையலாம்.

விரிவுரைகளை ஆயுட்காப்புறுதி கூட்டுத்தாபன நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கோபிநாத், பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி குணதிலக ஆகியோர் நடத்துவார்கள்.

### வர்த்தகர்களுக்கான வேண்டுகோள்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமையும், அதற்கு முந்திய தினங்களிலும் சகல வர்த்தக சங்கங்களும் தமது எல்லைக்கு உட்பட்ட பொது இடங்களில் சிரமதானங்களை மேற்கொள்ளவும்.

அத்துடன், அன்றைய தினம் தங்கள் வர்த்தக சங்க எல்லைக்குள் நினைவுப் பந்தல்கள் அமைத்து ஒலிபெருக்கிகள் மூலம் கரும்புலிப் பாடல்களை ஒலிக்கவிட்டு வீதிச் சோடனைகளை மேற்கொள்ளுமாறும் -

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் நிகழ்வுகளிலும், வர்த்தகர்களை கலந்து கொள்ளுமாறும் வர்த்தக சம்மேளனம் கேட்டுக்கொண்டுள்ளது.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
எட்டாவது அகவையில்



பெயர் : ப. தாரகா
முகவரி : ராஜஸ்தலம், அல்வாய் தெற்கு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

வாரநோக்கு

யாழவன்



# புலிகளின் பொறுமையைச் சோதிப்பதென்பது எரிமலையை குமுறவைக்கும் செயலேயாகும்

"போருக்கான சூழல் ஒன்று உருவாகி வருகிறது. அதனை எதிர்கொள்ள புலிகள் தயார்" என்னும் அறிவிப்பு கடந்த வாரம் வெளியாகியிருக்கிறது. இயன்றவரை பொறுமை காத்த புலிகளால் அரசின் மிலேச்சத்தனமான சமாதான முட்டுக் கட்டைகளுக்கு முகம் கொடுக்க முடியாததொரு கட்டாய சூழ்நிலை தோன்றியுள்ளது.

மக்கள் மத்தியிலே, மீண்டுமொரு போர் ஏற்படத்தான் போகிறது. எனும் அச்சவுணர்வு பரவிவருகிறது. கடந்த பொதுத் தேர்தலின் போது காயப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலே அனுமதிக்கப்பட்ட சமாதான தேவையின் ஆயுட்காலம் அருகி வந்து அண்மித்த சில நாட்களில் அதிவேகமாக குறைந்து வருகிறது. சில சந்தர்ப்பங்களில் அது இறந்து போகக் கூடிய ஒரு சூழ்நிலையும் ஏற்படலாம் போலுள்ளது. எது எப்படியாயினும் மீண்டுமொரு போர் ஏற்படுவதை வடக்கு -கிடக்கு வாழ் மக்களும் சில தென்னிலங்கை வாழ் புத்திஜீவிகளும் மட்டுமே விரும்பவில்லை அத்துடன், மீண்டுமொரு போரைத் தாங்கும் வலுவும் நாட்டிலே இல்லை.

பொதுத் தேர்தலையே கடன் பட்டு நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்ட அரசு மீண்டுமொரு போரை வலிந்து ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை அதள பாதாளத்திற்குள் தள்ள நினைக்கிறது. இந்த அநியாயத்தனமான சிந்தனையினால் மொத்தத்தில் பாதிப்புக்குள்ளாவது அப்பாவிப் பொது மக்களே மீண்டுமொரு போர் ஏற்படின் அதன் பாதிப்பிலிருந்து மீளுவதற்கு அதிக வருடங்கள் எடுக்கும் என்பது மட்டும் திண்ணம்

'செக்கிழுக்கும் மாடுகளைப் போல' மீண்டும் மீண்டும் ஒரு வட்டத்தையே சுற்றி வரும் தென்னிலங்கை ஆட்சிப் பீடங்கள் மாறுவதற்கான வாய்ப்பு அணுவளவேனும் ஏற்படாது. அவ்வப்போது ஆட்சி பீடங்களும் ஆளுவோரும் மட்டுமே மாறினார்களே தவிர, அடிப்படைக் கொள்கை இன்று வரை மாறவில்லையென்பது கண்கூடு.

ஐயா மாறி அம்மாவும், அம்மா மாறி ஐயாவும் எனஆட்சிப் பீடங்கள் மாறின. அமைச்சர்களும் மாறினர். ஆனால், இனப்பிரச்சினை தீர்விலே எவையும் மாறவில்லை. இந்த நிலை இன்னும் தொடருமாக இருந்தால் தமிழர்களும் தமது கொள்கையிலிருந்து என்றுமே மாறமாட்டார்கள். மாறவும் முடியாது அவர்கள் தமது தமிழ் நாட்டுக் கோரிக்கையை மேலும் வலுப்படுத்தி நிற்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இறுதியாக நடைபெற்ற நோர்வே - புலிகள் சந்திப்பு மிக இறுக்கமான முடிவுகளை பிரதிபலிப்பதாகவே உள்ளது. சமாதானப் பாதை மீது அரசு காட்டிவரும் அக்கறையீனத்தையும், அசமந்தப் போக்கையும் புலிகள் வன்மையாகக் கண்டித்ததுடன் அது தொடர்பான தமது அதிருப்தியையும் வெளியிட்டுள்ளனர். அத்துடன் அரசுக்கு எச்சரிக்கை அறிவிப்பையும் விடுத்துள்ளனர். தண்ணீர் மூன்று தடவையே பொறுக்கும் என்பார்கள். ஆனால், புலிகளோ முப்பது தடவைகளுக்கு மேலே பொறுத்துவிட்டார்கள்.

இறுதியாக அவர்களது பொறுமையை அரசு கருணா மூலம் சோதித்துப் பார்க்கின்றது. புலிகளால் மட்டுமன்றி தமிழ் தேசியப் பற்றுள்ள அத்தனை பேரினாலும் விரட்டப்பட்ட கருணாவுக்கு புகலிடம் அளிப்பதன் மூலமாக அரசு சமாதானத்தை, அதன் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. ஒரு காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஒரு முக்கியஸ்தராகப் பங்கு பற்றிய ஒருவர் இன்று சமாதானத்திற்கான முட்டுக்கட்டையாக மாறி நிற்கின்றார்.

புலிகளைப் பொறுத்த வரையிலே கருணாவை ஓரம் கட்டுவதோ அல்லது அவரையும் அவரது கொள்கைகளையும் ஒழித்துக் கட்டுவதோ ஒன்றும் முடியாத காரியமில்லை என்பது அவர்களை நன்றாகப் புரிந்து கொண்டவர்களுக்கு விளங்கும். ஆனால், இன்று புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் அவர்களது கைகள் கட்டப்பட்டு இருப்பதனாலன்றி கருணாவை அரசு மூலமாக ஓரங்கட்டவே புலிகள் விரும்புகிறார்கள். இதுவே உண்மையான நிலைப்பாடாகும்.

ஆதரிப்பார் யாருமின்றி கருணாவை அனாதையாக்கவே புலிகள் எண்ணுகிறார்கள் அதனாலேயே அரசுக்கு கருணா தொடர்பாக அதிக அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறார்கள். தனது நிலையை இன்னும் ஸ்திரப்படுத்திக் கொள்ளாத அரசு விட்டோடிய கருணாவிற்கு ஆதரவளிப்பதா? அல்லது விடுதலைப் புலிகளுடன் கை கோர்ப்பதா? என இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கிறது.

இந்த நிலையிலே கருணா தமிழீழ விடுதலைப் புலிகள் கருணா அணியென புதியதொரு அரசியற் கட்சியை ஆரம்பித்துள்ளதாகவும் தேர்தல் திணைக்களத்திலே அதனைப் பதிந்துள்ளதாகவும் செய்திக்கள் வெளியாகியுள்ளன. உன்னதமான வார்த்தைகளிலே வடிக்க முடியாத உயரிய விடயமான தமிழீழ விடுதலை என்ற பதத்தை தனது கருணா அணிக்கு முன் இடுவதற்கு கருணாவிற்கு என்ன அருகதை இருக்கிறது என்ற அர்த்தமிக்க கேள்வியொன்று இங்கே எழுகின்றது.

ஆயிரம் ஆயிரம் மாவீரர்களது குருதிச் சுவடுகளால் கட்டப்பட்டு வரும் தமிழீழ விடுதலையை வல்லாதிக்க சக்திகளின் நயவஞ்சகத் தனத்திற்கு அடகு வைத்து, அதன் மூலமாகப் பெற்றுக் கொண்டதை வைத்துக் கொண்டு வாலாட்டிவரும் கருணா தமிழ் மக்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றவே முயல்கிறார். தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் சொல்லுக்கு மக்கள் அளித்து வரும் அளவற்ற மரியாதையை நன்கு அறிந்த அனுபவித்த இன்றும் அதே சொல்லைக் காரணமாக வைத்தே அரசிடம் தஞ்சம் பெற்று வரும் கருணா தனது கட்சிக்கு புலிகள் பெயரைச் சூட்டி இலாபம் தேட முயல்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினதும், அதன் தலைமையிலானதும் கொள்கைகள் தனக்கு உடன்பாடில்லாததென்று தெரிவித்தே கருணா புலிகளின் தலைமைக்கு எதிராக இயங்க முற்பட்டார்.

அந்த நிலையில் புலிகளின் பெயர் மட்டும் அவருக்கு எப்படி உடன்பாடாக அமைந்தது? புலிகள் அமைப்பை வியாபார ஸ்தாபனம் என நினைத்து கருணா தனது கட்சிப் பெயரிலே இணைக்க முனைகிறாரா. அதற்கு தமிழ்த் தேசிய மக்கள் அனுமதிப்பார்களா? இது பொறுத்திருநது பார்க்க வேண்டிய விடயமே சமாதானம் பொங்கி நிற்கும் இந்த வேளையிலே, அரசு மீண்டும் போருக்கான முனைப்புக்களிலும், முன்னாயத்தங்களிலும் ஈடுபட்டு வருகிறது. அதன் படி அமெரிக்கா கையளித்த "போர்க்கப்பலை" ஓடிச் சென்று பெற்றிருக்கிறது. அமெரிக்காவைப் பெறுத்த வரையிலும் அது சமாதான நகர்வுகளிலே இரட்டை வேடதாரித் தனத்தையே பின்பற்றி வருகிறது.

> "மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல யாரோ விசமிகள் செய்த சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் சில இனவாத ஊடகங்கள் முடிச்சுப் போடுகின்றன. சில தினங்களுக்கு முன்பு இடம் பெற்ற ஹலோரெஸ்ட் நிறுவனத்தின் வாகனங்கள் எரிப்புச் சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளே காரணமென அந்த ஊடகங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. இது உண்மையிலேயே கையாலாகாத் தனமாகும்"



அதனாலேயே இலங்கையிலே தற்போது நிலவும் சமாதான சூழலைப் பயன்படுத்தி நல்லெண்ண விஜயம் என்னும் பெயரிலே அவ்வப்போது தனது படைத் தளபதிகளையும், நவீன போர்க்கப்பல்களையும் இலங்கைக்கு அனுப்பி வைக்கின்றது. இது சிலவேளைகளில் புலிகளுக்கு அமெரிக்காவிடுக்கும் எச்சரிக்கையாகக் கூடக் கருதப்படலாம்.

கொழும்புத் துறைமுகத்திற்கு இரு தடவைகளுக்கு மேல் அமெரிக்க போர்க் கப்பல்கள் வந்து திரும்பின அதனைவிட இலங்கை இராணுவத்துடன் இணைந்து போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. இலங்கை இராணுவ அதிகாரிகளையும் தன்னுடைய நாட்டிற்கு அழைத்து பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திலே அமெரிக்கா சென்ற இலங்கைக் கடற்படைத் தளபதி தயாசந்தகிரியிடமே தனது நாட்டுக்குதவாத ஒரு பழைய ரக போர்க்கப்பலை "அன்பளிப்பாக" அமெரிக்கா கொடுத்திருக்கிறது அந்தக் கப்பலை ஓட்டிப் பார்த்த இலங்கை அதிகாரிகளும் திருப்திப்பட்டுள்ளனர். விரைவிலே கப்பல் இலங்கைக்கு வரவுள்ளது.

இதேவேளை அமெரிக்கா தனது போர்க் கப்பலை இலங்கைத் துறைமுகத்திற்கு அனுப்பிய சில நாட்களில் இந்தியாவும் தனது போர்க் கப்பல் ஒன்றை இலங்கைத் துறைமுகத்திற்கு அனுப்பியிருந்தது. இந்து சமுத்திரப் பிராந்தியத்திலே ஆதிக்கம் செலுத்துவது தொடர்பாக ஏலவே அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் இடையே பனிப்போர் ஒன்று இடம்பெற்று வருகிறன்றது. அரசியல் அறிவுள்ளோர்கள் அறிந்துள்ள விடயம் இப்போது அமெரிக்கா ஒரு போர்க் கப்பலை கையளித்துள்ளது. இந்தியா தனது பங்குக் சமாதானத்தைக் குழப்பும் நடவடிக்கையின் ஒரு படியாக இதனைக் கையளிக்கவுள்ளது. இது அடுத்து எழுந்துள்ள கேள்வியாகும்.

இது இவ்வாறு இருக்க இலங்கை இராணுவக் கட்டமைப்பிலும் சடுதியாக முக்கிய மாற்றங்கள் சில கொண்டு வரப்பட்டுள்ளன. புதிய இராணுவ தளபதியாக சாந்த கொட்டே கொல பதவியேற்றுள்ளார். முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் லயனர் பலகல்ல சேவை நீடிப்புக்கள் எதுவும் வழங்கப்படாமல் வீட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளார்.

விடைபெற்றுச் செல்லும் வேளையிலேயே பலகல்ல ஒரு பெறுமதியான கருத்தொன்றைக் கூறிவிட்டுச் சென்றிருக்கின்றார். அதாவது தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலை அரசு சரியான முறையிலே பயன்படுத்தாவிட்டால் பாரிய அழிவுகளைச் சந்திக்க நேரும் என்ற பலகல்லவின் இந்தக் கருத்துக்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ஆனால், இந்த யதார்த்தமான கருத்தை தான் சேவையில் இருந்த போது எவ்வளவு தூரம் பலகல்ல கடைப்பிடித்தார் என்பது சிந்தனைக்குரியதே. கருணாவுடன் தொடர்புகளை நெருக்கமாக பேணிவந்ததாக கூறப்படுபவர் ஜெனரல் லயனல் பலகல்ல கருணா புலிகளின் தலைமைக்கு எதிராகப் பிரிந்த போது முதலாவதாக அணுகிய நபர் பலகல்ல தன்னுடன் ஒரு புதிய புரிந்துணர்வு உடன்படிக்கையை கிழக்குக்காகச் செய்யும்படி பலகல்ல மூலமாக ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கருணா. கருணாவினது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பலகல்ல அது தொடர்பாக ஜனாதிபதியுடனும் பேசியிருந்தார். ஆனால், அப்போதைய தேர்தல் சூழ்நிலையை கருத்திற் கொண்டு அரசியல் இலாபக் குறிக்கோளுடன் செயற்பட்டு வந்த ஜனாதிபதி கருணாவின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால், பின் கதவு வழியாக கருணாவிற்கு தனது ஆதரவுக் கரத்தை ஜனாதிபதி நீட்டத்தவறவில்லை. கருணாவோடு- ஜனாதிபதி பற்றிய கையே இன்று சமாதானம் கையறு நிலைக்குச் செல்லக் காரணமாகியது. பலகல்லவும் வெளியே தெரியாதவாறு கருணாவுக்கு உதவி இருப்பதற்கான வாய்ப்புக்களே உள்ளன. பதவி பறிபோனபின் தான் பலகல்லவுக்கு சுடலை ஞானம் பிறந்திருக்கிறது.

சிலவேளைகளில் பலகல்ல தற்போது வெளிப்படையாகக் கூறுவது போல சமாதான விரும்பியாகவே உண்மையிலே இருந்திருப்பின் அதுவே அவரது பதவி பறிபோவதற்கு காரணமாகவும் இருந்திருக்கலாம். ஏனெனில், போர் ஆவல கொண்டு செயற்பட்டு வரும் அரசு இராணுவத் தளபதியாக போர் வெறிகொண்ட ஒருவரை நியமிப்பதிலேயே குறியாக இருந்திருக்கும். இதுவே சாந்த கொட்டேகொடவின் நியமனமாக இருக்க முடியும்.

அரசு தன்னிச்சையாகவே தான் தோன்றித்தனமாக செயற்படுவதாக கருதமுடியாது. பல பின்னணிச் சக்திகளும் அரசுக்கு போர் ஆவலை ஊட்டி வருகின்றன. ஒரு புறம் ஜே.வி.பியும் மறுபுறம் "தர்மராஜ்ஜியம்" நிறுவப் புறப்பட்ட சிங்கள, பௌத்த அடிப்படைவாதிகளான ஜாதிகஹெல உறுமயவினரும் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு வழங்கப்படுவதை ஆட்சேபித்து வருகின்றனர்.

ஒரு தலைமையின் கீழ் ஒரு கட்சி இராட்சியமே நிறுவ முடியாது பிளவுபட்டுப் போயுள்ள ஜாதிக ஹெல உறுமயவினர் தர்மராட்சியத்தை எப்படி நிறுவப் போகின்றார்கள். முளைத்து மூன்று முளை விடு முன்னர் ஜாதிகஹெல உறுமயவிற்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. கருத்து முரண்பாடுகள் அவர்களுக்குள் இரு அணிகளைத் தோற்றுவித்துவிட்டன. 'தர்மராஜ்ஜியம்' இன்று இரு வழிப்பாதையாக பிரிந்துவிட்டது. இவ்வாறு ஒன்பது பேருக்குள் ஒற்றுமை பேண முடியாத ஜாதிகஹெல நாட்டில் ஒற்றுமை நிலவுவதையும் விரும்பவில்லை.

இதனாலேயே தமிழினத்திற்கு விரோதமாக அவ்வப்போது முளைக்கும் காளான்களை கையசைத்து வரவேற்கின்றது. முன்னர் ஆனந்த சங்கரிக்கு அமைச்சர் பதவி வழங்க முன்வந்த ஜாதிகஹெல உறுமய இன்று கருணாவுக்கு பூரண பாதுகாப்பு வழங்கும் படி அரசைக் கோரி வருகிறது. அரசும் கருணா விடயத்தை கருவியாகப் பயன்படுத்தி சமாதானத்தைக் குழப்ப முயன்று வருகின்றது. சமாதானத்தைக் குழப்ப சில ஊடகங்களும் தமது பங்கை ஆற்றி வருகின்றன.

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல யாரோ விசமிகள் செய்த சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் சில இனவாத ஊடகங்கள் முடிச்சுப் போடுகின்றன. சில தினங்களுக்கு முன்பு இடம் பெற்ற ஹலோரெஸ்ட் நிறுவனத்தின் வாகனங்கள் எரிப்புச் சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளே காரணமென அந்த ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன. இது உண்மையிலேயே கையாலாகாத் தனமாகும்.

சம்பவத்தின் சூத்திரதாரிகளின் சந்தேகங்கள் கூட உறுதியான முறையிலே வெளிப்படுத்த முடியாத நிலையிலே புலிகள் மீது குற்றஞ் சாட்டுவது என்பது இனவாத முகமூடியை அணிந்து கொண்டு உலகைத் திரும்பிப்பாராது எழுதும் ஊடகங்களின் முகத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

இவ்வாறு பல வழிகளிலும் சமாதானத்தைக் குழப்புவதற்கான நெருக்குதல்களும், ஆதரவுகளும் அரசிற்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றை முட்டாள் தனமாக பயன்படுத்தும் அரசு என்ன செய்யப் போகின்றது போரை விரும்பி எதிர்கொள்ளப்போகிறதா? அல்லது விரும்பியோ, விரும்பாமலோ சமாதானத் தேரை இழுக்கப் போகிறதா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். பொறுமையின் எல்லை கள் புறக்கணிக்கப்பட்டால் அது எரிமலையைவிட வலியதாக இருக்கும்.

□□□

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சிற்றின்பம் வெ:கி அறன் அல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்*

திருக்குறள்

# நமது நோக்கு

## கருணா விவகாரம் தொடர்பான வாக்கு மூலங்களின் உண்மைகள்...

கிழக்கில், விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டவரான கருணாவுக்கு பாதுகாப்பு வழங்குவதுடன் அவரைப் பயன்படுத்தி, குழப்பங்களை ஏற்படுத்தும் வகையிலான வன்முறைகளை அரங்கேற்றிவரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் சதி நடவடிக்கைகளுக்கு அரசின் அங்கீகாரம் இருக்கிறது என்று விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டை ஜனாதிபதி சந்திரிகா மறுத்துள்ளவிதம் அவர் மீதும், அவரின் தலைமையிலான அரசின் மீதுமான சந்தேகங்களை அதிகரிக்கச்செய்யவே உதவியுள்ளது.

கிழக்கில் அண்மையில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி ஆயுதபாணிகளாக ஊடுருவி தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் மற்றும் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் மீது தாக்குதல்களை நடாத்தியும், படுகொலைகளை மேற்கொண்டும் பதற்ற நிலையை உருவாக்கியவர்கள் யார்? அவர்கள் யாருடைய ஆதரவுத்துண்டுதல், மற்றும் பாதுகாப்பு உத்தரவாதத்துடன் மட்டக்களப்பு மண்ணில் அராஜகச் செயல்களை மேற்கொண்டார்கள் என்பது ஒன்றும் இரகசியமான விடயம் அல்ல.

சுயமாக இயங்கும் வலுவற்ற தனிமனிதனாக விடுதலைப் புலிகளால் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழினத்தாலும் ஒதுக்கப்பட்டு, ஓடஓடவிரட்டப்பட்ட கருணா எங்கே ஒளிந்து பாதுகாப்புத் தேட வேண்டுமோ அங்கேதான் 'ஒண்டிப்போயுள்ளார்.' அதாவது, அவர் தனித்து இயங்க முடிவெடுத்தபோது யாருடைய பாதுகாப்பை வெளிப்படையாகவே கோரினாரோ, எவருடன் இணைந்து இயங்க விருப்பம் தெரிவித்தாரோ, அவர்களுடன்தான் அவர் இருக்கிறார். அந்தப் புகலிடத்தை விடவும் வேறொரு பாதுகாப்பான இடம் அவருக்கு-அவரின் இந்த நிலையில் இருக்கவே முடியாது.

அது இராணுவ முகாம்தான், எதிரியின் முகாம்தான், ஒரு துரோகிக்கு மிகவும் பாதுகாப்பான இடமாக இருக்கும். தனது தேவைகளை அபிலாஷைகளை நிறைவேற்ற முனையும் எதிரானவன், தனக்கு எதிர் முகாமிலிருந்து துரோகியாக இனங்காணப்பட்டு துரத்தப்பட்டவர்களுடன் நட்புப் பூணுவதன் மூலம் அவர்களின் தேவைகளை அறிந்து, அவர்களின் பலவீனங்களை பயன்படுத்தி தனது இராணுவ அரசியல் இலக்குகளை எட்டமுனைவதென்பது, ஒரு வகை இராணுவ இராஜதந்திர உத்தியேயாகும். கடந்த காலங்களில் இத்தகைய இனத் துரோகிகள் பலரை இலங்கையரசும், இராணுவமும் அவர்கள் சரணடைந்த வேளைகளில், அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதாகக் கூறிக் கொண்டு பின்னர் கைக்கூலிகளாகப் பயன்படுத்திய வரலாற்று ஆதாரங்கள் நிறையவே உண்டு.

அந்த அனுபவ அறிவின் அடிப்படையில் பார்க்கும் போது, ஜனாதிபதியின் மறுப்பு நகைப்புக்கிடமான ஒன்றாகவே உள்ளது. ஜனாதிபதியின் பெரும் நம்பிக்கைக்கு உரியவரும், அர்சின் ஊடகப் பேச்சாளரும, அமைச்சருமான மங்களசமரவீர, கருணாவுக்கு இராணுவம் பாதுகாப்பு அளித்ததை பகிரங்கமாகவே ஒப்புக் கொண்ட பின்னர், அரசும், இராணுவத் தரப்பும், ஜனாதிபதியும் மறுக்கமுயல்வது கோமாளித்தனமானதே ஆகும்.

அரசின் மற்றொரு அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா, தானும் கருணாவுடன் தொடர்புகளை வைத்திருந்ததை ஒப்புக் கொண்டுள்ளார் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

கருணா விவகாரம் கொதிநிலையில் இருந்த போது அவரைப் பாராட்டி அவரது குணாம்சங்களைப் பெருமளவில் சிலாகித்தவர் வேறு யாருமல்ல... இரண்டு தினங்களின் முன்னர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றவரான இராணுவத் தளபதி லயனல் பலகல்லே தான். அவர் ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரிய விசுவாசி, ஜனாதிபதியின் சமிக்ஞை கிடைக்காமல் வாயையே திறக்கமாட்டாதவர். அப்படிப்பட்டவர் கருணா புகழ் பாடியபோது கருணா அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்று விட்டார் என்பது தானே அர்த்தம். பலகல்லவுக்கும், கருணாவுக்கும் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்பாடுதான் அவரை இராணுவம் பாதுகாக்கவும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அவரைப் பொறுப்பேற்கவும் காரணம் என்பதை எந்த ஆதாரத்தையும் காட்டி நிரூபிக்க வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால் அதற்கான சான்றுகள் பகிரங்கமானவை.

இப்போது ஜனாதிபதியின் கூற்றின் சொல்லமைப்பை கூர்ந்து நோக்கினால் மற்றொரு உண்மையும் புலனாகும். அதாவது, கருணாவுக்கு உதவ இராணுவத்திற்கு அரசு அதிகாரம் அளிக்கவில்லையாம்! அப்படியானால் அரசு அதிகாரம் வழங்காமல், இராணுவம் தன்னிச்சையாகச் செயற்பட்டு அரசிடம் எந்த ஆலோசனையும் கேட்காமல்தான் கருணாவுக்கு பாதுகாப்பு உதவியை அளித்துள்ளது என்றா ஜனாதிபதி கூறுவதற்கு முனைகிறார்.

புதிதாக பதவியேற்ற இராணுவத் தளபதி மற்றொரு வேடிக்கையான கருத்தைக் கூறுகின்றார். "கருணா எங்கே என்பதை இந்தத்தருணம் வரைக்கும் நான் அறியேன்... நான் சொல்வது முற்றிலும் உண்மை" எனச் சத்தியம் செய்யும் அவர், "எமக்குத் தெரியாமல் கருணா விவகாரத்தில் இராணுவம் சம்பந்தப்பட்டிருக்குமானால் நிச்சயமாக அது பிழையான விடயம். எதிர்காலத்தில் இம்மாதிரியான விடயங்கள் இடம் பெறாமல் இருப்பதை நான் உறுதிப்படுத்துவேன்". என்று சறுக்கி விழுகிறார்.


இதுவும் ஒரு மறைமுக ஒப்புதல் வாக்குமூலம் தானே...! இனிமேல் நடவாது என்றால் இதுவரை நடந்துள்ளது என்று தானே அர்த்தம்.

ஆகவே எந்த வகையிலும் ஜனாதிபதியாலோ, அரசாலோ, இராணுவத்தாலோ கருணா விடயத்தில்- தாம் எந்த வகையிலும் சம்பந்தப்படவில்லை என்று உறுதியாகக் கூற முடியவில்லை என்பதே உண்மை. எனவே கருணா விவகாரத்துக்கு முற்றுப்புள்ளிவைக்கும் நடவடிக்கையை அரசு இதய சுத்தியுடன் மேற்கொள்ளாதவரை சமாதான முன்னெடுப்பை தமிழர் தரப்பு - அதாவது விடுதலைப்புலிகள் மேற்கொள்வது சாத்தியம் இல்லை.

கருணா விவகாரத்துக்கு அரசு எப்படி முற்றுப்புள்ளி வைக்கப் போகிறது.

சமாதான முன்னெடுப்பை அது எப்படி மேற்கொள்ளப் போகிறது? அரசும் ஜனாதிபதியும் தான் தீர்மானிக்க வேண்டும்.

## நாடும் நடப்பும்




செய்திக்கட்டுரை — த.கஜமுகன்

# மீள் குடியேறிய மக்கள் மீதான அரச படையினரின் கெடுபிடிகள்




தென்மராட்சி தெற்குப் பகுதியானது - படையினரின் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, பல வருடங்களாகின்றன. இந்தக் காலப்பகுதியில் குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் பல விதமான இன்னல்களைச் சந்தித்துள்ளனர். அகதி என்ற பெயரோடு தமது ஊர்களை விட்டு வெளியேறி அவதிப்பட்டுள்ளனர்.

இவ்வாறான ஒரு நிலையில் தம்மை மீள்குடியேற அனுமதிக்குமாறுகோரி, பல்வேறு அரசியல் தலைவர்களுக்கும் மகஜர்களை அனுப்பியுள்ளனர்.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசின் பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும்கூட, இந்தப் பகுதி மக்கள் பல தடவை தமது மகஜர்களைச் சமர்ப்பித்து இருக்கின்றார்கள்.

மகஜர்களைக் கையளித்துக் களைத்துப்போன மக்கள் - தம்மை மீளக்குடியேற அனுமதிக்குமாறு, சாகும்வரையான உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் பகுதியின் படை அதிகாரிகள் - மக்களின் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கண்டு மக்களை மீளக்குடியமர அனுமதி வாங்கித் தருவதாகக்கூறியதன் பேரில், தமது உண்ணாவிரதப் போராட்டத்தை மக்கள் கைவிட்டனர்.

இந்தவகையில், மூன்றிலொரு பகுதி மக்கள் மறவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர அனுமதி அளிக்கப்பட்டனர்.

தமது சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றோம் என்ற மகிழ்ச்சியுடன் - மீள்குடியமர்ந்த மக்கள் தமது சொந்தப் பிரதேசங்களிலும், பல துன்பங்களையே அனுபவித்தனர். படையினரின் கெடுபிடிகளைத் தாங்கவேண்டியவர்களாயினர்.

மீள் குடியமர்ந்த குடும்பங்கள் - தமது வீட்டின் முன்னால் குடும்ப அங்கத்தவர்களின் பெயர் அடங்கிய குடும்பப் படம் ஒன்றைத் தொங்கவிடவேண்டும் என்றும்,

படைமுகாம் ஊடாக மாலை ஆறுமணிக்குப் பின்னர் இந்தப் பிரதேசப் பக்கங்களில் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், அதேபோல இந்தப் பிரதேசத்தைவிட்டு வெளியில் செல்லமுடியாது என்றும், காவலரண் ஊடாக ஒரு மணிக்குப் பின் எவரும் பயணம் மேற்கொள்ள முடியாதென்றும் இவ்வாறான நிபந்தனைகளைப் படையினர் பிறப்பித்துள்ளனர்.

இந்த நிபந்தனைகளுக்கு மத்தியில்தான் மீள்குடியேறிய மக்கள் தமது சொந்த இடங்களில் வாழ்க்கையை மேற்கொள்கின்றனர்.

இரவு நேரங்களில் ஏற்படுகின்ற சுகவீனங்கள்- வீணான உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தக்கூடியவகையில் படையினரின் இந்த நிபந்தனைகள் காணப்படுகின்றன.

படையினர் அடிக்கடி சோதனை என்ற பெயரில் வீட்டுக்குள் நுழைவதால், பெண்கள் பெரிதும் அச்சமும், விசனமும் அடைந்தவர்களாகவுள்ளனர்.

புதியவர் எவரும் இந்தப் பிரதேசங்களுக்குள் நுழையப் பயமடைகின்றனர். புதியவர்களைத் துருவித்துருவி விசாரணை செய்யும் படையினரால் வெளியிடங்களிலுள்ள உறவினர்களுடனான தொடர்புகள் அற்றுப்போகும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

மீள் குடியேறிய பிரதேசங்களில் வாழ்க்கை நடத்தும் இந்த மக்களின் வாழ்க்கையில், போர்ச் சூழல் நன்றே தென்படுகின்றது. சமாதானம் நிலவும் இத்தகைய சூழலிலும் இந்தப் பகுதி மக்கள் நிம்மதியை இழந்துதான் வாழ்க்கையை நடத்துகின்றனர்.

இதேவேளை - தென்மராட்சியின் பெரும்பாலான இடங்கள் இன்னமும் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்படவில்லை.

வெடிபொருட்கள் அகற்றப்படவில்லையெனக் கூறியே மீள் குடியமர அனுமதி மறுக்கப்பட்டுவருகின்றது.

இதேவேளை - இராணுவம் தங்கியுள்ள வீட்டின் உரிமையாளர்களுக்கு மாத வாடகையைக் கொடுத்துவிட, அந்தக் குடும்ப உரிமையாளர் கேட்கும் தொகையை கொடுத்துவிட படையினர், பிரதேச செயலகம் ஊடாக விபரங்களைத் திரட்டி வருவதாகவும் அறியப்படுகின்றது.

இந்தப் பகுதி மக்களின் விவசாய நிலங்களில் விவசாயம் செய்ய மக்கள் விரும்புகின்றார்களா? அல்லது மானியம் பெற விரும்புகின்றார்களா? என்ற விபரங்களும் திரட்டப்படுகின்றன.

இவ்வாறான ஒருவகையில் வாழும் தென்மராட்சி மக்கள் பெரிதும் விசனம் அடைந்த நிலையிலுள்ளனர்.

மக்களின் வாழ்விடங்களில், நிம்மதியாக வாழ்வதற்கு சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே இந்தப்பகுதி மக்களின் அங்கலாய்ப்பாக உள்ளது.

மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள தீவிர கெடுபிடிகளைத் தளர்த்தி, மீள் குடியமர்ந்த மக்களைச் சுதந்திரமாக வாழ விடுவதே சமாதானச் சூழலில், மக்கள் வாழ்வைச் சிதைக்க விரும்பாத படையினர் செய்யவேண்டிய பேருதவியாக அமையும்.

# போரால் சிதைந்த கலாசார விழுமியங்களை மீளக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்!

## நீதிவான் விக்னராஜா தெரிவிப்பு

இலங்கையில் சிறந்த உயர்நீதிமன்ற வளாகமாகக் காணப்படும் கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு அடுத்ததாக சிறந்த நீதி மன்றம் ஒன்று மிகவிரைவில் யாழ்.மண்ணில் நிறுவப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா மிக விரைவில் நடைபெறவுள்ளது என, யாழ்.மாவட்ட நீதிவான் த.விக்னராஜா தெரிவித்தார்.

நேற்று சிவபூமி பாடசாலைத் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே நீதிவான் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கையில் - கடந்த 20 ஆண்டுகளாக இந்த நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக எமது மொழி, சமயம், கலாசார விழுமியங்கள் சிதறிச் சிந்துப்பட்டுப் போயுள்ளது. இவற்றை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஒரு சில நடவடிக்கைகள் மேற் கொள்ளபபடுகின்றன. அதற்கு ஆறு திருமுகனின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்தப் பாடசாலை ஓர் முன்னுதாரணமாகும்.

தற்போது அரசாங்கத்தின் உதவியுடனோ, சில அமைச்சர்களின் உதவியுடனோ, வெளிநாட்டவர்களின் உதவியுடனோ எமது யாழ்.குடாநாட்டிலுள்ள ஆலயங்கள் வர்ணங்கள் பூசப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்குகின்றன. இது மகிழ்ச்சிக்குரிய விடயம், வரவேற்கத்தக்க விடயம்தான்.

ஆனால், அதனைவிட முக்கியமானதொன்று இந்தப் போர்க் காலச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட எமது மக்களிற் பலர் வறியவர்களாக, ஊனமுற்றவர்களாக, விதவைகளாக இருக்கின்றார்கள், ஆனால், இவர்களுக்கு புனர்வாழ்வு நடவடிக்கையை வழங்க அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும் செயற்படவில்லை.

எமது கலாசாரம், மக்கள் வாழ்க்கைமுறை தனிச்சிறப்பானது. கிராமங்கள்தோறும் ஆலயங்கள் இருக்கின்றன. அங்கு உற்சவங்கள் நடைபெறுகின்றன. இதற்குப் பணத்தை வாரி வழங்குகின்றனர். ஆனால், அந்தப் பணம் ஆக்கபூர்வமானதாக செலவிடப்படுகிறதா என்பது தொடர்பாக நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

வறிய மாணவர்களுக்கும், வியாபாரம் செய்யக்ககூடிய வறிய குடும்பங்களுக்கும் இவற்றை வழங்கி, அவர்களை முன்னேற்ற, முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

மனப்பதிவுகள்... -தி.தவபாலன்

# ஏழ்மையுள் நொந்தழியும் திருமலைத் தமிழர் வாழ்வு..


சமாதான சூழ்நிலை 2 ஆண்டுகளாக நீடிக்கையில் தம் வாழ்ந்த வாழ்வு முடிவுக்கு வரவில்லை என்றே திரு கோணமலையின் கிராமங்களில் வாழும தமிழ் மக்கள் ஏங்குகின்றனர். திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் தமிழ்க் கிராமங்கள் மிகமோசமாக பின்னடைந்து மக்கள் வறுமையின் பிடியிலேயே வாழ்கின்றனர். அவர்கள் மிகமோசமாக பொருளாதார, கல்வி ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வறுமையின் அடிமட்டத்திலேயே இந்த மக்கள் இருக்கின்றனர். இவை பற்றிய ஒரு கருத்தாய்வை நேரடியாக மேற்கொண்டவகையில் மக்களின் அவலம் வெளிக்கொண்டு வரப்படவில்லை என்பது தெரிய வந்துள்ளது. திருகோணமலையைப் பொறுத்த வரை கணிசமான நிலப் பரப்புகள் விவசாயத்தை ஆதாரமாகக் கொண்டவை.

இவற்றில் சிறந்த நீர்ப்பாசனமாக ஆண்டு பூராவும் நீரோடும் மகாவலி கங்கை கிளைகள், யான் ஓயா, பன்குளம் ஆறு என்பவற்றின் பரப்புகள் சிங்களக் குடியேற்றங்களுக்குட்பட்டுள்ளன. குறைந்தளவு வளமான விவசாய நிலங்களே தமிழர்களிடம் உள்ளன. பெரும்பாலான தமிழ் நிலங்கள் வரண்ட பகுதிகளாகும் அத்துடன் 12 ஆண்டு காலப் போரில் தமிழ் மக்களின் நிலங்களில் படையினர் மேற் கொண்ட இராணுவ ஆதிக்கங்கள் தமிழர்கள் விவசாயத்தில் பொருளாதார வசதிகளை மேம்படுத்த முடியாது செய்தது.

அதேவேளை ஒரு சிங்களவரே தூரத்திலுள்ள கிராமங்களுக்கு ஒழுங்கான வீதிகளமைப்புகள் கூட இல்லை. திருகோணமலை நகரிலிருந்து அதன் தென் எல்லை வரையான வெருகல் வரை ஒரு பயணம் மேற்கொண்ட போது இந்த வேறுபாடு தெரிந்தது. திருகோணமலை நகரிலிருந்து அநுராதபுரச் சந்தி வரை ஒழுங்கான வீதி போடப்பட்டுள்ளது.

அதற்கப்பால் பன்குளம் என்ற தமிழ்க் கிராமம் ஊடாக ஹொரவப் பொத்தானை வரை செல்லும் வீதி மிக மிகமோசமாக இருக்கிறது. இது




ஒரு A தர வீதி. A12 குறியீட்டு எண்ணைக் கொண்டது. இது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்டது. ஆனால் ஒரு C தர வீதிக்குரிய தரம் கூட இல்லாததாக இது காணப்படுகின்றது. வவுனியாவுக்கான போக்குவரவு வீதியாகவும் இது இருக்கின்றது.

இவற்றை விட மக்களின் வசிப்பிடங்கள் பெரும்பாலும் குடிசைகளாகவே உள்ளன. ஒழுங்கான பேருந்து போக்குவரவில்லாமயால் பலபத்து மைல்களுக்கும் இவர்கள் நடந்தே செல்கின்றனர். ஒரு பழைய மிதி வண்டியைக் கூட கொண்டிராத அளவுக்கு இங்குள்ள அநேக தமிழ் மக்கள் வாழ்கின்றனர்.

இவர்கள் சிங்களவரின் வயல்களிலேயே கூலிகளாக செல்ல வேண்டிய ஒரு ஆபத்தான நிலைமையும் காணப்படுகிறது. இன்றைய உலகில் ஒரு மிதிவண்டியை கூட அடிப்படை போக்குவரவுக்கு வைத்திராமல் கால் நடையிலேயே மைல்க்கணக்கில் காரியமாற்றுகின்ற அளவுக்கு அவல நிலைமை இங்கு காணப்படுகின்றது.

போர் நிறுத்த உடன்பாட்டின்பின் கூட இம்மக்கள் எவராலும் கவனிக்கப்பாதுள்ளமை முக்கிய விடயமாகும். அரசசார்பற்ற நிறுவனங்கள் மீள்குடியமர்வு என திருகோணமலையின் வட பகுதி கிராமங்களில் மையம் கொண்டுள்ளனவே தவிர தென் திருகோணமலையில் போரிலும் அமைதியிலும் வாழ்வு நிலைமைமாறாது அவலப்பட்டு பரதேசிகள் போல நலிந்து மெலிந்து போயுள்ளமை தொடர்கின்றது.



குறிப்பாக தமிழ் மக்கள் என்று இவர்கள் அரச நிர்வாகத்தால் புறக்கணிக்கப்படுகின்றனர். அரச சார்பற்ற நிறுவனங்களின் கண்களுக்கு இவை ஏன் தென்படாதிருக்கின்றன. அல்லது கவனிக்கப்படாதுள்ளன. இப்பொழுதே நாம் நேரில் கண்டு பார்த்ததால் எமக்கு தெரிந்த இந்த விடயங்கள். இது வரை எந்தளவு மோசமாக இருந்தனவோ என்பது வெளிப்படாத விடயம். தமிழ் மக்கள் மிக மோசமாக நலிந்து போயுள்ள அதே வேளை, மூதூர் முஸ்லிம் மக்கள் தமிழரை ஒப்பீட்டளவில் மேம்பாட்டைந்திருக்கின்றனர்.

இதற்கு 12 ஆண்டு கால போரில படையினரால் தமிழ் மக்கள் நசுக்கப்பட்டது காரணமாகும். இத்தகைய நசுக்கப்படல் முஸ்லிம்களுக்கு இல்லாத காரணத்தால் அவர்கள் பொருளாதாரத்தில் மேம்பட்டனர். 12ஆண்டு கால பொருளாதார நலிவ ?ருகோணமலையின் தமிழ் கிராம மக்களை மிகமோசமாக நலிவடையச் செய்து அவர்களை பஞ்சப் பராரிகள் நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது.

திருகோணமலையின் அரச அதிபராக தொடர்ந்து இருக்கும் எழுதப்படாத விதியாக இருந்து வருவதால் அரச நிர்வாகத்தினால் திருகோண மலையின் தமிழ்ப் பகுதிகளான மூதூர் ஈச்சிலம் பற்று, திருகோண மலையின் வட பகுதிக் கிராமங்களின் அபி விருத்தி அல்லது மக்கள் நலன் புறக்கணிக்கபபட்டு வந்துள்ளது. அநேகமாக எல்லாமே நகரும் நகர் அருகான பிரதேசங்களிலும் மட்டுமே நடக்கின்றன. பெயரளவிற்கு கிராமங்களுக்கு செய்யப்படும் சில காரியங்களும் மக்களை துளியளவும் எழ முடியாது செய்துள்ளன.

திருகோணமலையில் தொலை தூர சிங்களக் குடியேற்றங்கள் சிலவும் கூட பாராமுகமாக இருப்பதும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும். திருகோணமலையின் நகரும் நகரண்டிய பிரதேசங்களிலும் அபரிதமான அபிவிருத்திகள் மக்கள் நலன் பேணும் நடவடிக்கைகள் உள்ளன.

ஆனால் நகரிலிருந்து தொலை தமிழ் மக்களின் அடிப்படை போக்குவரவுக்கு இது தேவையாக இருப்பதால் தான் இது திருத்தப்படவில்லையா கேள்வி எழுகின்றது. ஏனெனில், திருகோணமலை கொழும்பு மார்க்க ஹபறணவிற்கான A6 வீதி மிகத் தரமாக காணப்படுகின்றது. கொழும்பு மையநோக்கு காரணமாகவே இந்த வீதி திறம்பட பராமரிக்கப்படுகின்றது.

அதேவேளை, கந்தளாயிலிருந்து மூதூர் வெருகல் பகுதிகளுக்கு செல்லும் சாலை சிங்களக் குடியேற்றங்களின் முடிவுப் பகுதிகளான அலி ஒழுவ, மகிந்தபுர் ஆகியவற்றிலிருந்து புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாக ஒரு மிதிவண்டியைக் கூட ஒழுங்காக ஓட்டமுடியாத அளவு உள்ளது. மூதூரிலிருந்து வெருகல் ஊடாக மட்டக்களப்பு செல்லும் A 15 வீதி ஒரு C தர வீதியை விட மோசமாகவுள்ளது.

அடிப்படையில் மக்கள் போக்கு வரவுக்கான வீதி அமைப்புகள் இவை.

இங்கு அரச நிர்வாகம் இவர்களை கவனிக்காது என்பது நிச்சயமான போதும் தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பிர்கள் பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட மூலம் ஏதாவது செய்ய முடியும் அல்லது அரசசார் பற்ற நிறுவனங்கள் கண்வைக்க வேணடும்.

இரண்டும் இல்லாவிடில் இப்போதைக்கு அமைதியிலும் இந்த மக்கள் பஞ்சப்பட்டவர்களாக நலிவு வாசிகளாகவே இருக்கப் போகிறார்கள்.

ஒரு நிமிடம் சிந்திப்போம்!

# போலியான வாழ்க்கை முறையிலிருந்து எம்மை நாமே விடுவித்துக்கொள்வோம்

பெரியோர் நினைப்பது குழந்தைகள் பணிவுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று, அதாவது, பெரியவர்கள் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும். எதிர்த்து கருத்துக்கள் சொல்லக் கூடாது. அவ்வாறு சொன்னால் அந்தக்குழந்தை பணிவற்றவன் என்ற கருத்தியல் இருக்கவே செய்கின்றது.

தம்மை மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்ற மனநிலை மனிதர்களிடம் பொதுவாக இருக்கின்றது. இது நல்லது. ஆனால், தாம் மற்றவர்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை மறந்து போகின்ற தன்மை தவறானது ஆகும்.

நாம் சொல்லுகின்ற கருத்துக்களை எவ்வித மறுப்பும் இல்லாமல் 'ஆமாசாமி' சொல்ல வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு, இந்த எதிர் பார்ப்பு உடையவரை அடக்கமில்லாத, கீழ்படிவில்லாத மனிதன் என்று கருதிக் கொள்வதும், அவரைக் குறித்து மறையான கருத்தியலை உருவாக்கிக் கொள்வதும் அபத்தமானது.

பணிவுள்ள மனிதன் என்பதற்கு எமது சமூகப் புலம் கருதுவது. எவ்வித பிரச்சினையும் இல்லாத, சொல்வதை மறுக்காது அப்படியே செய்யும் மனிதர்களைத் தான் பணிவுள்ளவன் என்று கருதுகின்றது.

"நான் சொல்கிறேன் என்பதாலேயே நீ ஏற்றுக் கொள்ளாதே, உன் பகுத்தறிவினால் நான் சொல்வதையெல்லாம் கேள்விக்குரியதாக்கு, உனக்கு நீயே ஒளியாக இரு" என்றார் புத்தர்.

ஆகவே, ஒருவர் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது. கருத்துக்கள் முன்வைக்க - சிந்தனைகளை உருவாக்க அனைவருக்கும் உரிமை இருக்கின்றது. ஆனால், அவற்றை மறுப்பவர்கள் தீயவர்கள் என்றும், ஏற்பவர்கள் நல்லவர்கள் என்றும் கருதிட முடியாது.

எப்போதும் புத்திக் கூர்மையுள்ள - அறிவுள்ள - சிந்தனா சக்தியுள்ளவர்கள் சிந்திப்பது இயல்பு. அவர்கள் மற்றவர்கள் சிந்தனைகளை கேள்விக்குள்ளாக்குவதும் - விமர்சனத்துக்குள்ளாக்குவதும் வழமை. இதை வைத்துக் கொண்டு அவர்கள் பணிவற்றவர்கள் என்று எடைபோட முடியாது.

பணிவு என்ற நற்பண்பு, ஒரு மனிதனிடம் இயல்பாக அமைய வேண்டும். இந்தப்பண்பு எவ்வித ஏற்றத் தாழ்வுமின்றி அனைவருக்கும் இருக்க வேண்டும்.

பொதுவாக நல்லவர்கள் என்று சமூகம் எதைக் கருதுகின்றது என்றால் அடுத்தவர் சொல்வதை மறுக்காமல் ஆமாசாமி சொல்பவர்களைத் தான். இவர்கள் தமது மனச்சாட்சிக்கு விரோதமாக செயற படுகின்றவர்கள். அவ்வாறு எதிர்த்து கதைத்தால் என்னைப் பற்றி தவறாக நினைப்பார்கள், ஆகவே, நானும் என் வேலையும் என்று பயந்து வாழ்பவர்கள். இவர்களைத் தான் சமூகம் பணிவுள்ளவர்கள் என்று கருதி, நல்ல மனிதர்களாக பட்டம் சூட்டுகின்றது.

எதிர்த்து கதைப்பவர்கள், நீதி - நியாயம் பற்றி பேசுகின்றவர்கள் முரண்பாடுள்ள மனிதர்கள் என்று தள்ளிவைக்கப்படுகின்றார்கள். இத்தகையோர் கீழ்படிவில்லாத - பணிவற்றவர்கள் என்ற நிலையும் இருக்கின்றது.

இத்தகைய அவலம் ஏன்? யாரும் யாருக்கும் அடிமையல்ல? அவ்வாறு அடிமையாக இருப்பவர் கள் ஒரு கோழை, வாழத் தெரியாத சுயநலப் போக்குடையவன். இவர்கள் குறித்து சமூகம் விழிப பாக இருக்க வேண்டும்.

பணிவு என்ற நற்பண்பை பெரியவர்கள் நினைபபது, இது சிறியவர்களுக்கு உரியது என்று, முதலாளிகள் நினைப்பது, இது தொழிலாளர்களுக்கு உரியது என்று, ஆசிரியர்கள் நினைப்பது, இது மாணவர்களுக்கு உரியது என்று இவ்வாறு ஒரு மட்டுப்படுத்தும் பண்பாக பணிவைக் கொண்டிருப்பது அழகல்ல. மாறாக இந்தப் பண்பை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

மற்றவர்களுக்கு போலியாக, நான் பணிவுள்ளவன் என்பதை வெளிப்படுத்த முற்படுவது கேவலமான செயற்பாடு, பணிவு என்ற பண்பு உண்மையாக உள்ளத்தின் அடியாளத்தில் இருந்து நடத்தையாக வெளிப்பட வேண்டும்.

அடுத்தவரை மதிக்க வேண்டும் என்பதற்காக அவருக்கு அடிமையல்ல. அவருக்கு பணிவிடையாளரும் அல்ல, பணிவிடை செய்ய வேண்டும் எனபதற்காக பயந்து - பணிந்து ஒழுகுதலும் சிறப்பானது அல்ல. அதிகாரத்தில் உயர்ந்தோரும் தமது கௌரவத்தை தக்க வைப்பதற்காக மற்றவர்கள், தம்மை கண்டதும் பயந்து - பணிந்து நடக்க வேண்டும் என்று, எதிர்பார்ப்பதும் தவறாகும்.

ஆகவே, நாம் எத்தகைய செயற்பாடுகளை வைத்து பணிவுள்ளவர் - பணிவற்றவர் என்று எடை போடுகின்றோம். எமது சமூக புலத்தில் இருககின்ற தவறான சிந்தனைப் போக்குகள் பற்றி சிந்திப்போம், எமது வாழ்வியலை மாற்றி அமைப்போம். மற்றவருக்கு பயந்து பணிவுள்ளவர்களாக வாழாது, உயர்வு - தாழ்வு என்ற வித்தியாசத்தில் பணிந்து நடக்காது செயற்படுவோம்... சிந்திப்போம்...

- யாழ்.ராதவல்லி.

# மூவாயிரம் மாணவர்களுக்கு சத்துணவு வழங்க ஏற்பாடு

நாடெங்கிலும் உள்ள பாடசாலைப் பிள்ளைகளின் மூன்றில் ஒரு பகுதியினர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இதன் பிரகாரம் அடுத்த வருடத்தில் 3000 பாடசாலைப் பிள்ளைகளுக்கு போசாக்கு நிறைந்த உணவுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் போசாக்குப் பிரிவின் பணிப்பாளர் எச்.எம்.குடலியத்த தெரிவித்தார்.

தற்போது 1300 பாடசாலை மாணவர்களுக்கு ஊட்டச் சத்து நிறைந்த உணவுகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மரணச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு புதிய அறிவுறுத்தல்கள் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

அரசாங்க வைத்தியர்களும், தனிப்பட்ட வைத்தியர்களும் இனி மேல் மரண, வைத்திய அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்குவது சம்பந்தமாக புதிய அறுவுறுத்தல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக இலங்கை மருத்துவ சங்கத்தின் உபதலைவர் ஆனந்த சமரசேகர தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் சார்பாக வழங்கப்படும் மரணச்சான்றிதழ்களும், விடுமுறைக்காக வழங்கப்படும் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களில் கடந்த காலத்தில் பல முறைகேடுகள் இடம் பெற்றிருப்பதால், இந்தப் புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இப்படியான முறைகேடான சான்றிதழ்கள் வழங்கப்படும் வைத்திய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதோடு, அவர்களது பதிவுகளும் ரத்துச் செய்யப்படும் என்று ஆனந்த சமரசேகர மேலும் தெரிவித்தார்.

# பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களுக்கு யுனிசெப் சீருடை

வட-கிழக்கில் யுத்த சூழலால் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை மீண்டும் சேர்த்து அவர்களுக்கு இலவச சீருடைகளை "யுனிசெப்" நிறுவனம் வழங்கி வருகிறது.

"பற்றிப்பிடித்தல" செயற்பாடு மூலம் பாடசாலைக்கு மீண்டும் கிழக்கில் சேர்த்துக் கொண்ட சுமார் 2600 பிள்ளைகளுக்கு "யுனிசெப்" நிறுவனம் உதவிகளை வழங்கி வருகிறது.

இவர்களுக்கு ஏற்கனவே கற்றல் உபகரணங்களடங்கிய பாடசாலைப் புத்தகப் பைகளும் வழங்கப் பட்டன.

சம்மாந்துறை வலயத்தில் இடைவிலகிய 450 மாணவர்களுக்கு தற்போது இலவச சீருடைகளை முறைசாராக்கல்வி உதவிக் க்ல்விப் பணிப்பாளர்களான விரி.சகா தேவராஜா, எம்.எ.ரசூல் ஆகியோர் வழங்கி வருகின்றனர்.

மேலும் சுமார் 750 பேரளவில் இடைவிலகிய மாணவர்கள் வந்து சேர்ந்துள்ளனர். அவர்களுக்கு தொழிற் கல்வி மூலம் பயிற்சி வழங்க "யுனிசெப்" நிறுவனம் திட்டமிட்டு வருகின்றது. இவர்களது பெற்றோர்களுக்கான கருத்தரங்கு ஒன்றும் அடுத்த வாரம் நடைபெறும்.

# கொலம்பிய கிளர்ச்சிக் குழுவுடன் அரசு பேச்சுக்களை ஆரம்பித்தது

கொலம்பியாவின் வலதுசாரிக் கிளர்ச்சிக் குழு அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது. நாட்டின் வடக்குப் பகுதியில் பிரகடனப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயத்திலேயே இந்த பேச்சுக்கள் ஆரம்பமாகியிருக்கின்றன.

வலதுசாரி கிளர்ச்சிக்குழுவான ஏ.யூ.சியுடனான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இவர்களால் தடுத்துவைக்கப்பட்டிருந்த முன்னாள செனட்டர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டார். சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் பாதுகாப்பு வலயப்பகுதியில் ஏ.யு.சி கிளர்ச்சிக்குழுவின் 10 தலைவர்களும், 400 கிளர்ச்சியாளர்களும் தங்கியிருக்கின்றனர்.

இந்தப் பாதுகாப்பு வலயம் கொடோயா மாகாணத்திலுள்ள சஸ்ரா பி.டி றலிரோ நகரிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாதுகாப்பு வலயம் 360 சதுர கிலோமீற்றர் பரப்பில் அமைந்துள்ளது.

இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றுகின்ற கிளர்ச்சியாளர்கள் பல்வேறு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. பேச்சுக்களில் ஈடுபடும் அரசதரப்புக் குழுவில் சமாதான ஆணையாளர் லூயிஸ் காலோஸ் நெஸ்ரி போவும் பங்கேற்கிறார்.



இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் கிளர்ச்சிக் குழுத்தலைவர்களில் பலர் கம்போடியாவில் மிகப்பெரிய போதைப் பொருள் கடத்தல்காரர்கள் என்றும், இவர்களில் குறைந்தது ஐவருக்கு அமெரிக்கா பிடியாணை பிறப்பித்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

அதேவேளை, பேச்சுக்கள் ஆரம்பமாகி ஒரு நாளின் பின்னர் முன்னாள் செனட்டர் ஜோஸ் ஜினோவை கிளர்ச்சியாளர்கள் விடுவித்தனர். இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்டிருந்தார்.

### அமெரிக்க இராஜாங்கச் செயலர் பவல்

# வடகொரிய வெளியுறவு அமைச்சரை இந்தோனேஷியாவில் சந்தித்து பேச்சு

(ஜகார்த்தா)

அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின் பவல் வடகொரிய வெளியுறவு அமைச்சர் பயீக் நம்சுன்னை நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் நடந்த இந்தச் சந்திப்பு சுமார் 20 நிமிடம் வரை நீடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

வடகொரியா அணுவாயுதத் திட்டங்களைக்கைவிட வேண்டுமென அமெரிக்கா கூறிவரும் வேளையில் கடந்த இரண்டு வருடங்களாக இரு நாடுகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் இரு நாடுகளினதும் உயர்மட்டத் தலைவர்கள் நேற்று சந்தித்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் கடந்த வாரம் ஆறுநாடுகள் கலந்துகொண்டு நடத்திய பேச்சுவார்த்தைகளில் முன்மொழியப்பட்ட விடயங்கள் குறித்தும் அவற்றை முன்நகர்த்திச் செல்வது தொடர்பாகவும் இருவரும் கலந்துரயாடியதாக கொலின் பவலின் பேச்சாளர் றிச்சட் பௌச்சர் தெரிவித்தார்.

அமெரிக்கா வடகொரியாவுடன் இணைந்து இருதரப்பு உறவுகளை முன்நகர்த்திச் சென்றால் அது வடகொரியாவின் நிரந்தர எதிரியாக இருக்கமாட்டாதெனத் தெரிவித்தார் வடகொரிய வெளியுறவு அமைச்சர் பயீக்.

இதுவே தற்போதுள்ள பிரச்சினை தீர ஒரே வழி - இல்லையெனின் இதனைத்தவிர வேறுவழியில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

வடகொரியா தனது அணு ஆயுதத் திட்டங்களைக் கைவிட்டாலேயே அந்நாட்டுக்குரிய எண்ணை மற்றும் அவசர உதவிப் பணிகள் வழங்கப்படுமென அமெரிக்கா தெரிவித்தது.

# துருக்கியில் கார் குண்டுவெடிப்பு ஐவர் பலி, பலர் படுகாயம்!

துருக்கியின் கிழக்குப் பகுதியிலுள்ள வான்பகுதி மாகாணத்தில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் ஐவர் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்தனர்.

மாகாண ஆளுநர் கிக்மெற்ரான் சென்றுகொண்டிருந்த வாகனத்தின் தொடரணிக்கு அருகிலேயே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றதாகவும், ஆளுநர் காயங்கள் எதுவுமின்றித் தப்பிவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் தமது ஒரு தலைப்பட்ச உடன்படிக்கையைக் கைவிடவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில் அப்பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.


மாகாண ஆளுநரைத் தாம் எவ்வித காயங்களும் ஏற்படாத வகையில் காப்பாற்றியதாக, ஆளுநரின் சாரதியும், அவரது மெய்ப்பாது காவலர்களும் தெரிவித்தனர்.

சுயாதீன செய்திகளின்படி கார்க் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை ஐந்தெனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், ஒருவரே கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

குர்திஷ் மொழி, கல்வி மற்றும் ஒளிபரப்பு என்பவற்றை ஐரோப்பிய ஒன்றியம் சீர்திருத்தம் செய்யவுள்ளதாக அனுமதி அளித்ததைத் தொடர்ந்தே இந்த வன்செயல்கள் அதிகரித்துள்ளன.

பெரும்பாலான குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் பின்புலமான ஈராக்கில் தளங்களை அமைத்துள்ளதாகவும், இவர்களை அகற்றுவதற்கு துருக்கி அமெரிக்காவிடம் உதவி கோரியுள்ளதாகவும் பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.



*அமெரிக்காவால் அனுப்பப்பட்ட காசினி விண்கலம் சனிக்கிரகத்தினுள் சென்று நாசா விண்வெளி மையத்துக்கு எடுத்து அனுப்பிய படத்தைக் காணலாம்.*



*ஜப்பானிலுள்ள ரோக்கியோ மருத்துவமனைக்கு ஊனமுற்ற நாயொன்று சக்கரவண்டியின் உதவியுடன் செல்வதைப் படத்தில் காணலாம்.*

# பாக்தாத்திலுள்ள ஹோட்டல்கள் மீது நேற்று றொக்கட் தாக்குதல்கள்!

(இஸ்லாமாபாத்)

பாக்தாத்தில் வெளிநாட்டவர் பயன்படுத்தும் இரண்டு ஹோட்டல்கள்மீது றொக்கட் தாக்குதல்கள் நேற்று நடத்தப்பட்டன.

பாக்தாத்திலுள்ள சேர்தான் ஹோட்டல்மீது நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலில் சிறிய சேதமே ஏற்பட்டது. அடுத்த தாக்குதல் பாக்தாத் ஹோட்டலுக்கு முன்னால் இருந்த வாகனத்தரிப்பிடம்மீது நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் அங்கு தரித்துநின்ற வானொன்று எரிந்து சாம்பராகியது. இந்த வாகனத் தரிப்பிடத்தை வெளிநாட்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதல்கள் திக்றிற் ஆற்றுக்கு அருகிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மற்றும் அலுவலகம் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்கே நடத்தப்பட்டதாகவும் ஆனால், அவை அந்த இடங்களில் விழாமல் முன்னரேயே விழுந்துவிட்டதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

மற்றைய தாக்குதல் பாக்தாத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள மர்ஜாம் ஹோட்டல்மீது நடத்தப்படடது. இந்தக் ஹோட்டலும் வெளிநாட்டவர்கள் தங்கும் இடமாகும். இதில் ஒரு றொக்கட் தாக்குதல் ஹோட்டலுக்கு அருகில் அமைந்துள்ள இந்தோனேஷிய தூதரகத்திற்கு அருகில் நடத்தப்பட்டபோதிலும் அது வெடிக்கவில்லை.

மூன்றாவது தாக்குதல் பாக்தாத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இஸ்லாமிய அடிப்




படைவாதக் கட்சியின் அலுவலகம் மீது நடத்தப்பட்டபோதிலும் எறிகணை அக்கட்சியின் வாசல்பகுதியில் விழுந்து வெடித்ததில் அங்கு பாதுகாப்பு கடமையில் இருந்த ஒருவர் காயமடைந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

## ஆப்கானில் இரண்டு இடங்களில் குண்டுவெடிப்பு

ஆப்கானிஸ்தானில் அல் கொய்டா தீவிரவாத ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டது. இருப்பினும் ஒருசில இடங்களில் தீவிரவாதிகள் மறைமுகமாகத் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். தற்போது ஆப்கானில் நடந்துவரும் தேர்தல் ஏற்பாடுகளைச் சீர்குலைக்கும் வேலையில் தீவரவாதிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஜலாலாபாத் நகரில் இரண்டு இடங்களில் குண்டு வெடித்தது. இதில் குறைந்தது 27 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் 3 பொலிஸ் அதிகாரிகள், 5 குழந்தைகளும் அடங்குவர்.

## ஆடுகளுக்கும் நோய்!



உலகம் முழுவதும் பல பகுதிகளில் மேட்கவ் எனப்படும் நோய் மாடுகளைத் தாக்கி பல மாடுகள் மற்றும் உயிர்கள் இறந்துவிட்டன.

இந்த நோய் இன்னும் முழுமையாக அகலாத நிலையில், பினலாந்து நாட்டிலுள்ள ஆடுகளை ஸ்கிரபி என்ற கொடியநோய் தாக்கி உள்ளதாம். இதில் ஆயிரக்கணக்கான ஆடுகள் இறந்துவிட்டன.

இதனால் அதிர்ந்துபோன பின்லாந்து நாட்டு அரசு, அந்த நோயைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

# ஸ்பெயினில் மேலும் தாக்குதல் குறித்த ஆவணங்கள் பொலிசாரால் கண்டுபிடிப்பு



ஸ்பெயின் தலைநகர் மட்றிட் பகுதியில் மார்ச் மாதம் ரயில் வண்டிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்பின் மேலும் பல தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருந்த ஆவணங்களை ஸ்பெயின் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த ஆவணங்கள் மட்றிட்டிலுள்ள பாழடைந்த வீடொன்றிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்றிட் ரயில் குண்டுவெடிப்புச் சந்தேக நபர்களை கடந்த ஏப்ரல் மாதம் ஸ்பெயின் பொலிஸார் கைது செய்ய முயன்றவேளை அவர்கள் தம்மைத் தாமே அழித்தனர்.

இந்த ஆவணங்கள் மூலம் ஸ்பெயினின் தலைநகர் மட்றிட் பகுதியில் உள்ள பிரிட்டன் ஆங்கில பாடசாலை ஜேவிஸ் ஹோட்டல் மற்றும் கேளிக்கை விடுதி என்பன தாக்குதலுக்கு இலக்காக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்பெயின் பொலிஸாரின் வேண்டுகோளின்படி ஸ்பெயின் எம்.பிஸ பிரிவு நடத்திய விசாரணைகளிலேயே இந்த விடயங்கள் அம்பலத்திற்கு வந்துள்ளன.

# ஓரிரு மாதங்களில் பாகிஸ்தான் ஏவுகணை பரிசோதனை நடத்தும்

## ஜனாதிபதி முஷாரப் தெரிவிப்பு



பாகிஸ்தான் தற்போது அடுத்தடுத்து ஏவுகணை சோதனைகளை நடந்திவருகிறது. இந்தநிலையில் புதிதாக மிகப்பெரிய ஏவுகணைச் சோதனையை செய்ய பாகிஸ்தான் தயார்செய்துவருவதாக அதிபர் முஷாரப் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது-

இன்னும் ஓரிரு மாதங்களில் ஏவுகணை சோதனை நடத்தப்படும். இதற்காக நமது விஞ்ஞானிகள் கடுமையாக உழைத்துவருகிறார்கள இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முஷாரப்பின் இந்த அறிவித்தலை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், தனது கவலையையும் வெளியிட்டுள்ளது. முஷாரப்பின் இந்த அறிவித்தல் தென்னாசியப் பிராந்தியத்தில் பதட்டத்தை அதிகரிக்கச்செய்யுமென வெள்ளை மாளிகை அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கரும்புலிகள் நினைவு ஊர்திப் பவனி குடாநாட்டில் செல்லும் பாதை விபரம்!

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 5 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள கரும்புலிகள் நாளை முன்னிட்டு குடாநாட்டில் கரும்புலிகள் நினைவு ஊர்திப் பவனி இடம்பெற்று வருகிறது.

நேற்று ஆரம்பமான கரும்புலிகள் நினைவு ஊர்திப் பவனியின் இரண்டாம் நாளான இன்று ஊர்தி செல்லும் பாதை விபரம் யாழ்.மாவட்ட அரசியற்துறையினரால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இன்று காலை 8 மணி தொடக்கம் 9.30 மணிவரை தமிழீழ இளையோர் தேசிய தடகள விளையாட்டு விழாவில் வணக்கத்திற்காக நிறுத்தப்பட்டிருக்கும்.

காலை 9.30 - மானிப்பாய் வீதியூடாக ஓட்டுமடம் சந்தி.

காலை 10.00 - ஆனைக்கோட்டை பள்ளங்காட்டுச் சந்தி உதயசூரியன் சனசமூகநிலையம்.

(இவ்விடத்தில் சண்டிலிப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் ஊர்தியினை பொறுப்பேற்பர்.)

காலை 10.30 - மானிப்பாய் நகர்

காலை 10.45 - மருதடிச்சந்தி

காலை 11.00 - சீரணிச்சந்தி

(இவ்விடத்தில் சங்கானைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் ஊர்தியினை பொறுப்பேற்பர்)

காலை 11.30 - சங்கானை நகர்

காலை 12.00 - சித்தன்கேணி சந்தி

காலை 12.15 - வடலியடைப்பு

(இவ்விடத்தில் சண்டிலிப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் ஊர்தியினைப் பொறுப்பேற்பார்கள்)

மதியம் 12.30 - பண்டத்தரிப்பு

மதியம் 1.30 - தொட்டிலடிச் சந்தி

மதியம் 2.00 - மாகியப்பிட்டிச் சந்தி

மதியம் 2.15 - அளவெட்டி (முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தடி.

(இவ்விடத்தில் தெல்லிப்பளை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் ஊர்தியை பொறுப்பேற்பர்).

மதியம் 2.45 - அளவெட்டி ப.நோ.கூ. சங்கத்தடி

மாலை 3.15 - தெல்லிப்பளை நகர்

மாலை 3.45 - மல்லாகம் சந்தி

மாலை 4.15 - சுன்னாகம் நகர்

(இவ்விடத்தில் உடுவில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் ஊர்தியினைப் பொறுப்பேற்பர்.)

மாலை 4.45 - மருதனார்மடம் சந்தி

மாலை 5.30 - உரும்பிராய்ச் சந்தி

(இவ்விடத்தில் கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் ஊர்தியினைப் பொறுப்பேற்பர்.)

மாலை 6.30 - கோண்டாவில் சந்தி.

மாலை 7.00 - இருபாலைச் சந்தி.

இரவு 7.45 - கோப்பாய்ச் சந்தி.

இரவு 8.30 - புத்தூர்ச் சந்தி.

இரவு 9.30 - அச்சுவேலி நகர்.

3 ஆம் நாளான நாளை.

காலை 8.00 - கைதடிச் சந்தி

(இவ்விடத்தில் தென்மராட்சிக் கோட்ட தேசிய எமச்சிப் பேரவையினர் ஊர்தியினை பொறுப்பேற்பார்கள்)

கண்டிவீதியூடாக

காலை 10.00 -சாவகச்சேரி நகர்

காலை 11.30 - கொடிகாமம்

மதியம் 1.00 - வரணி மகாவித்தியாலயம்

மாலை 5.00 - நெல்லியடிச் சந்தி.

## சித்தாண்டியில் குடும்பஸ்தர் அடித்துக் கொல்லப்பட்டார்!

மட்டக்களப்பு சித்தாண்டி ஈரலிக்குளம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டதுடன் அவரது மனைவியும் அடிகாயங்களுக்குள்ளானார்.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் ஈரலிக்குளத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை - பூபாலபிள்ளை என்பவரே அடித்துக் கொல்லப்பட்டதுடன் அவரது மனைவியான பூபாலபிள்ளை பாக்கியம் அடிகாயங்களுக்கிலக்காகியவராவார்.

இவ்வாறு அடிகாயங்களுக்கிலக்காகி படுகாயமடைந்த பாக்கியம், செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

உயிரிழந்தவர் தொடர்பான மரண விசாரணை செங்கலடி வைத்தியசாலையில் நீதிவான் எ.எச்.எம். அஜ்மீர் முன்னிலையில் இடம்பெற்றது.

திருமணத் தகராறு காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்ப்டுகிறது.

## ஓட்டோவையும் சாரதியையும் வவுனியாவில் காணவில்லை!

### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(வவுனியா)

வவுனியா - மகாறம்பைக்குளம் பகுதியில் ஓட்டோ சாரதி ஒருவரும் அவரது ஓட்டோவையும் கடந்த செவ்வாய் இரவு முதல் காணவில்லையென வவுனியா பொலிஸ் நிலையத்தில் குறிப்பிட்ட நபரின் பெற்றோர் முறையிட்டுள்ளனர்.

மகாறம்பைக்குளம் மதீனா நகரைச் சேர்ந்த முகமட் றம்லான் (வயது 16) என்பவரே காணாமற் போனவராவர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

காணாமற்போன இந்த நபர் மகாறம்பைக்குளம் பகுதியில் ஓட்டோ வைத்து ஓடுபவராவார். கடந்த செவ்வாய்க்கிழமை இவரது ஓட்டோவை இருவர் வாடகைக்கு அமர்த்திச் சென்றனர்.

அதன் பின்னர் ஓட்டோவையும் குறித்த நபரையும் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் வவுனியாப் பொலிஸார், காணாமற்போன ஓட்டோ ஓமந்தைப் பகுதிக்கு அப்பால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றதற்கான பதிவு எதுவும் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் இல்லை எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். (03)

## முஸ்லிம் சிறுமியின் மீது மௌலவி பலாத்காரம்!

மட்டக்களப்பு - ஏறாவூர் பகுதியில் 11 வயது முஸ்லிம் சிறுமி மீது மௌலவி ஒருவர் பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

கடந்த 29 ஆம் திகதி ஏறாவூர் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் கல்விபயிலும் இந்தச் சிறுமி பாடசாலை முடித்து வந்து மௌலவியின் வீட்டிற்கு அரபு பாடம் கற்கச் சென்றார்.

இவ்வாறு சென்ற இந்தச் சிறுமியை குறித்த மௌலவி பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபடுத்தினார். அந்தவேளை சிறுமி கூக்குரலிடவே அயலவர்கள் மௌலவியின் வீட்டிற்கு வந்தவேளை மௌலவி தனது வீட்டின் பின் பக்கமாகத் தப்பிச் சென்றுவிட்டார்.

தற்போது இவரைப் பிடிக்கும் நடவடிக்கையில் ஏறாவூர் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## வெடிபொருட்கள் மீட்பு!

தென்மராட்சி - மறவன்புலவு பகுதியில் ஒரு தொகுதி வெடிபொருட்களை இராணுவத்தினர் மீட்டிருப்பதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

ரி 56 ரகத் துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் ரவைகள் - 2100, எம்.பி.எம்.ஜி ரவைகள் - 50 ஆகியனவையே மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## அகதிகளை ஏற்றிவந்த படகு கடற்படையினரிடம் சிக்கியது!

(மன்னார்)

தமிழ்நாடு - இராமேஸ்வரத்தில் தங்கியிருந்த அகதிகளை ஏற்றிவந்த இந்திய மீன்பிடிப்படகு ஒன்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

நேற்று அதிகாலை தலைமன்னார் கடற்பரப்பில் ரோந்துசென்ற கடற்படையினரே இந்த இந்தியப் படகைக் கைப்பற்றினர்.

இதிலிருந்த 29 அகதிகளும், நான்கு படகோட்டிகளும் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு - தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் இன்று தலைமன்னார் பொலிஸாரால் மன்னார் மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## பாகிஸ்தான் ஜனாதிபதி இலங்கை வருகின்றார்!

(கொழும்பு)

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பர்வேஷ் முஷாரப், எதிர்வரும் 30 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வரும் அவர், இலங்கையுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வில் பங்கேற்பார் எனத் தெரியவருகிறது.

அத்துடன், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடனும் பர்வேஷ் முஷாரப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஏறகனவே இந்தியாவுடன் கடந்த 2002 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

### இந்தியத் ...

தடையாக உள்ள விடயங்கள் குறித்து, கலந்தாலோசித்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கிலேயே எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு வந்திருந்தார்.

இவரின் மூலம் ஜனாதிபதி சந்திரிகா புலிகளுக்கு விசேட செய்தி ஒன்றை அனுப்பலாம் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

புலிகளின் கோரிக்கைப்படி அரசாங்கம் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக முதலில் பேச்சு நடத்தத் தயார் என்று ஜனாதிபதி சந்திரிகா சொல்ஹெய்ம் மூலம் புலிகளுக்கு தகவல் அனுப்பத் திட்டமிட்டிருந்தார்.

எனினும் கொழும்பு வந்த சொல்ஹெய்மை ஜனாதிபதி சந்திக்காத நிலையில் - முதலில் கிளிநொச்சி சென்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவுடனும் இதுகுறித்து சொல்ஹெய்ம் பேச்சு நடத்தினார். இந்தப் பேச்சுக்கள் மூலம் எந்த இணக்கப்பாடும் எட்டப்படாத நிலையில் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிக்க சொல்ஹெய்ம் இந்தியா சென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு இவர் புதுடெல்கி சென்றார். இந்தியத் தலைவர்களுடன் சமாதான முயற்சிகள் குறித்து பேச்சு நடத்திய பின்னர், மீளவும் விரைவில் இவர் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

### பட்டதாரிகளுக்கான...

துக்கும் இடைப்பட்ட வேலையற்றோரின் எண்ணிக்கையில் இது 30 வீதமாகும்.

அரசாங்கம் தனது வாக்குறுதியை உரிய காலத்தில் நிறைவேற்றத் தவறியதை அடுத்து - உடனடியாக, வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் நாடு தழுவிய போராட்டத்தில் ஈடுபடப்போவதாக பல்கலைக்கழக மாணவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அதிரடிப்படை...

கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இச்சம்பவத்தில் காயமடைந்த இளைஞர், ராயு என்ற பெயரில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட பின்னர் வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்கி வருவதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

### புலிகளின் குரல்....

விக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு ஒலிபரப்பில் கரும்புலிகள் குறித்த பலவேறு நிகழ்வுகள் ஒலிபரப்பாகவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ் - முஸ்லிம்...

அடக்குமுறைகளும் இடம் பெறுகின்றன. இந்த நிலையைத் தடுத்து நிறுத்துவதற்கு சிறுபான்மை மக்களின நலன்கருதிச் செயற்படும் அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு வழங்குவது அவசியமாகும்.

இப்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்கு - நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைத் திரட்ட பெரும் முயற்சிகளை எடுத்து வருகிறது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நானோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியினரோ பணத்துக்காகவோ பதவிக்காகவோ சோரம் போகப் போவதில்லை என்று ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

### கன்ரர் விபத்தில்....

இந்தப் பகுதியின் ஆலயம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்தவேளை எதிரே வந்த கன்ரர் இன வாகனம் இவர்கள் மீது மோதியதாகக் கூறப்படுகிறது.

இந்த விபத்தின்போது சிறுமி உயிரிழந்ததைக் கண்ட சாரதி வாகனத்தைவிட்டு தப்பியோடியுள்ளார். இதனையடுத்து மக்கள் வாகனத்தை தீயிட்டனர்.

### இடைக்கால...

இத்தகைய செய்திகள் ஜனாதிபதியினதோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினதோ உத்தியோகபூர்வ கருத்துக்கள் இல்லையென்று அவர் மேலும் தெரிவித்தார்.

## கண்ணீர் அஞ்சலி



விஞ்ஞானபீடத்தின் கணிதத்துறை
சிரேஷ்ட விரிவுரையாளர் மதிப்பிற்குரிய
Dr.M.ஸ்கந்தராஜா

அவர்களின் மறைவு எமக்கு பேரதிர்ச்சியைத் தந்துள்ளது.

அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி, ஆத்மசாந்திக்கு பிரார்த்திப்பதோடு, இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

## பிரதேச செய்தியாளர் தேவை

'நமது ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு பிரதேச செய்தியாளர் தேவை. ஆர்வமுள்ள துடிதுடிப்பான ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

சுய விபரத்துடன் உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றிதழுடன் விண்ணப்பங்களை -

பிரதம ஆசிரியர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

### செய்தியாளர் தேவைப்படும் பிரதேசம்

அல்வாய்
கரவெட்டி
உடுப்பிட்டி
வல்வெட்டித்துறை
பருத்தித்துறை
கரணவாய்

கைதடி
வரணி
நாவற்குழி
கொடிகாமம்
பளை

குருநகர்
கல்வியங்காடு

உரும்பிராய்
அச்சுவேலி
நீர்வேலி
இருபாலை
நவக்கிரி
கோப்பாய்

உடுவில்
இளவாலை
பண்டத்தரிப்பு
வட்டுக்கோட்டை
சங்கானை
மாதகல்

மல்லாகம்
தெல்லிப்பளை
ஏழாலை

கோண்டாவில்
புன்னாலைக்கட்டுவன்
இணுவில்
கொக்குவில்
சுன்னாகம்

ஊர்காவற்துறை
மண்டைதீவு
வேலணை

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.